# திராவிடநாடு

19—3—61 | வார வெளியீடு | விலை 16 காசு


## எதற்காக?

—[ புலவர் பொன்னிவளவன் ]—

கண்கள் எதற்காக?—நம்
கண்கள் எதற்காக?
வண்ண மதி முக மங்கையர் தம்பால்
வட்ட மடித்திடவா?—பார்வைக்
கொட்ட மடித்திடவா?
இல்லை.
தென்னவர் வாட்டமும் திராவிடத் திருநாடு
தேய்வதும் கண்டிடத்தான்!—நாம்
தீவிரம் கொண்டிடத்தான்!
காதும் எதற்காக?—இரு
காதும் எதற்காக?
கீதம் இசைத்திடும் காதலி பாட்டினைக்
கேட்டு நெகிழ்ந்திடவா?—தலை
ஆட்டி மகிழ்ந்திடவா?
இல்லை.
பாதகர் ஆட்சியைப் போதும் என்போர் தரும்
வாதத்தைக் கேட்டிடத்தான்!—நம்
— வாட்டத்தை ஓட்டிடத்தான்!
வாயும் எதற்காக?—நம்
வாயும் எதற்காக?
வட்டித்த சோற்றினை வெட்டுவெட் டென்றுநாம்
வெட்டித் திரிந்திடவா?—சுவை
ஒட்ட அறிந்திடவா?
இல்லை.
எட்டுத் திசைதோறும் ஏகிநம் கொள்கையை
ஏற்று முழங்கிடத்தான்!—சொல்
இன்பம் வழங்கிடத்தான்!

# சதி செய்யும் சமுகம்

—[குறிஞ்சிநாடன்]—

நல்ல வளமுள்ளதுதான் அந்த இரு காணி நிலம். அதில் ஒரு மூலையில் கிணறு ஒன்று இருந்தது. அதன் உதவியால்தான் அந்த இரு காணி நிலமும் பயிர் செய்யப்பட்டு வந்தது. நிலத்திற்குச் சொந்தக்காரர் ஒரு பெரியவர். தாழ்த்தப்பட்டவன் என்று சமுகத்தால் ஒதுக்கப்பட்டவர். இவர் உழைப்பால்தான் பாலையாய்க்கிடந்த அந்நிலத்தைச் சோலையாய் மாற்றினார். அதற்காகவேதான் அவ்வூர்ப் பெரியகுடும்பத்தில் தோன்றிய 'சின்னம்மா' விடம் இரண்டாயிரம் ரூபாய் கடனும் வாங்கினார்.

சின்னம்மா கணவனை இழந்த ஒரு விதவை. மாமியாரோ வயது முதிர்ந்தவர். ஒரே ஒரு மகள் செல்லியுடன், தன் குன்றனைய செல்வத்தோடு வாழ்பவள். கண்டிப்பானவள். அதனால் செல்வச்செருக்கோடு, வறுமையென்றால் என்னவென்று தெரியாத வளாய் வளர்ந்தாள் செல்லி.

பெரியவர் தினம் காலையில்எழுந்து கலப்பையுடன் கழனிக்குச் செல்வார். உண்ட நேரம்போக மீதி நேரம் எல்லாம் தன் முதுகெலும்பு முறியப் பாடுபட்டுப் பலனை எதிர்பார்த்துக் கடன் கட்டும் நோக்கம் கொண்டு உழைப்பார்.

எதிர்பார்த்த பலன் கிடைத்தது. ஆனால், கடன் கட்டியபாடில்லை. வந்த வருமானம் கந்தாயம் என்னும் பெயரால் பாதியளவு கிராம முன்சீப்பிடம் சேர்க்கப்பட்டது. பாலை நிலமாக இருக்கும்பொழுது கந்தாயம் இருகாணிக்கும் 2 ரூபாய்தான். ஆனால், இப்போதோ கிடைப்பதில் பாதியென்ற அளவுக்கு வந்துவிட்டது. என்ன செய்வார் பாவம்! மனத்தைரியத்துடன் தன் ஒரே மகன் மணியைப் படிக்கவைத்தார். பையன் நல்ல புத்திசாலி. இன்டர்மீடியட்வரை படித்தான். அவ்வாண்டு, தான் படித்த திறத்தையெல்லாம் ஆண்டு நிறைவுத் தேர்வில் காட்டிவிட்டுக் கோடை விடுமுறையில் வீடு திரும்பினான்.

"நாளை மகன் வந்துவிடுவான். இனி நம் வேலை பாதிதான். நல்ல சமயத்தில் வந்தான். பயிர்வைக்க நான் ஒருவன் என்ன செய்வேன் என்று ஏக்கத்தோடு இருந்தேன். இந்த நேரத்தில் குருடன் பார்வை பெற்று இறுமாப்புடன் திரிவது போல எனக்கு என் மகன் வந்து விட்டான். இம்முறை துணிந்து இரு காணி முழுவதும் பயிர் செய்கிறேன். குறைந்தது மூன்று மாதமேனும் விடுமுறை இருக்குமே! நெல் விளைவதற்கும் லீவு முடிவதற்கும் சரியாக இருக்கும்"—என்று தன் மனதைத் தேற்றிக்கொண்டே வயல் வேலைகளை முடித்து வீடு திரும்பினார் அப் பெரியவர்.

பொழுதுபுலர்ந்தது. மகன் வரவை நோக்கிய கண்கள் மருண்டு பார்த்தன. தன் சுற்றத்தார் இருவருடன் தன் மகளும் வர, நடைபோட்டு வந்தாள் சின்னம்மாள்.

"என்ன வேலப்பா! நீ கடன் வாங்கி எத்தனை ஆண்டுகள் ஆகின்றன! இன்னும் திருப்பித்தராமல் வைத்திருக்கின்றாயே? சரி, முதல் தான் பிறகு தந்தாலும் இந்த இரண்டுமாத வட்டியாவது கட்டக் கூடாது? அதையும் செய்யாமல் இப்படி இருந்தால் எப்படி ஆவது?" என்று சிடுசிடுத்தாள் சின்னம்மாள்.

"என்ன செய்யறதுங்க! பெரிய மனசு வைத்துக் கொஞ்சம் பொறுத்துக்கொள்ளவேணும். இன்னும் மூன்று மாதம் பொறுங்க. இந்த ஐந்துமாத வட்டியும் கட்டிவிடுகிறேன்" என்றது அந்த இளகிய மனம்.

"அதெல்லாம் நமக்குத் தெரியாது. இந்த இரண்டுமாத வட்டிப் பணம் கொடுக்காவிட்டால் வாங்கிய பணத்தை மோசம் செய்யப் பார்த்தான் என்றுவழக்குத்தொடருவேன். சம்பாதிக்கிற பணத்தைக் கடன் கட்டாமல்; மகன் படிக்கிறான் என்று அனுப்பிக்கொண்டிருந்தா கடன் கட்டியாகுமா?"

என்று பலவாறு சொல்லிக் கொண்டிருந்ததைப்பொறுக்கமுடியவில்லை, செல்லியால்.

எல்லோரும் ஏதோ ஒலி கேட்டுத் திரும்பினர். கையில் பெட்டி படுக்கையுடன் கருப்புப் பாண்ட்டும், வெள்ளைச் சட்டையும் அணிந்து காலில் செருப்புச் சத்தம் போடச், சிரித்த முகத்துடன் வேக வேகமாக வீடு நோக்கி வந்துகொண்டிருந்தான் மணி.

"சட்டையும், பெட்டியும், செருப்பும்......! ஆளைப்பார்த்தா வெள்ளையும் சள்ளையுமாக என்ன நடை போட்டு வருகிறான் பார்! தகப்பன் வாங்கிய கடன் கட்ட முடியாமல் திண்டாடுகிறான்; அவன் இராசா வீட்டுப் பிள்ளைபோல் நடையிட்டு வருகிறான்" என்று எண்ண—வேலப்பனின் முகத்தைப் பார்த்தாள் சின்னம்மாள்.

"என் மகன்!! இன்று வருவதாகக் கடுதாசி போட்டு இருந்தான்" என்று ஆனந்தக் கண்ணீர் உகுத்தார் பெரியவர்.

"வாப்பா! கொண்டா பெட்டியை! நல்ல சுகமா? பரிட்சையெல்லாம் எப்படி எழுதியிருக்கே!"

என்று வாஞ்சையோடு கேட்டார் வேலப்பன். "நலம்தான் அப்பா! யார் இவர்கள் எல்லாம்......ஓகோ! பக்கத்துக் காட்டுச் சின்னம்மாவுங்களா! வணக்கம்"

"அதென்னடாது, வனக்கம்; சரி வேலப்பா நான் போய் வர்ரேன்.. நினைவிருக்கட்டும்."

என்று கூறி நகர்ந்துவிட்டன அவ்வுருவங்கள். அப்பாவின் மகிழ்ச்சி அளவை மீறிவிட்டது

(14-ம் பக்கம் பார்க்க)

# வரி இல்லையா? இல்லை-உண்டு.

19] ஆண்டு சந்தா ரூ. 8 (19—3—61) தனிப்பிரதி 16 காசு [ இதழ் 34

மாநில அரசினர் நிதிநிலை அறிக்கை வெளியிட்டு 'புதிய வரி ஒன்றும் போடவில்லை, பார்த்தீர்களா?' என்று நிமிர்ந்து நிற்க முயன்றனர். ஆனால் முடியவில்லை. மத்திய சர்க்கார் ஏராளமான பொருள்களுக்குப் புதுவரிகள் போட்டும், இருந்த விகிதங்களை உயர்த்தியும் விட்டனர். மத்திய அரசினர் போட்டாலும், மாநில அரசினர் போட்டாலும் வரிகள் மக்களைத்தான் வாட்டுகின்றன, வருத்துகின்றன.

'அப்படியானல் வரிகளே இல்லாமல் அரசு நடைபெற இயலுமா?' என்று ஆளவந்தோர் கேட்கலாம். இயலாது. நிச்சயமாக இயலாது. மக்கள் தாங்கள் பெறும் நன்மைகளுக்காக, நிம்மதியான வாழ்வுக்காக வரி செலுத்தியே ஆகவேண்டும். அதாவது வரி செலுத்தும் உரிமையினல் மக்கள் இவற்றைப் பெற்றே தீரவேண்டும். இன்று வரி செலுத்துகின்றனர், ஆனல் வாட்டம் தீர்ந்ததா என்ருல் இல்லை. வரி செலுத்துவதால் நாளுக்குநாள் புதுப்புது நன்மைகள் கிடைக்கின்றனவா எனின், அதுதான் இல்லை.

வரிகள் விதிப்பதிலும் வழிமுறைகள் உள்ளன என்று பொருளியல் விற்பன்னர் கூறுகின்றனர். இதன்மீது இவ்வளவு எடைதான் ஏற்றலாம் — இவ்வளவுதான் தாங்கும் என எதற்கும் ஓர் அளவு இருக்கிறது. அளவு இறந்தால் அமுதும் நஞ்சாகும்; மயிற்பீலியேயாயினும் அளவு மிகுந்தால் அச்சு இறும். அதும்பாலவே, மக்களுக்கும் தாங்கும் சக்தி என ஒரு அளவு இருக்கிறது. அந்த அளவுக்குள் வரி விதிப்பு இருக்குமாயின் வாட்டமின்றி வரி தருவர், வாழ்விலும் நிம்மதி இருக்கும். அந்த அளவு மீறினல் விளைவுகள் என்னென்னவாகும் என்பதனை வரலாற்றின் ஏடுகள் கூறுகின்றன.

அந்த ஏடுகளைப் படித்தறிந்ததாகக் கூறிடும் ஆளவந்தோர், இந்த அடிப்படை உண்மையை அடியோடு மறந்துவிட்டு, ஆண்டுதோறும் புதுப்புது வரிகளை விதித்துக்கொண்டிருப்பதானது வேதனைக்கு உரிய செயலாகும். 'வரி விதிப்பினல் விலைகள் உயர்ந்துவிட்டன— மக்கள் தொல்லைப்படுகின்றனர்' என்று எடுத்துக்காட்டினல் 'அதற்கு நாங்கள் என் செய்வோம். குறை எங்கள் மீது அன்று—வியாபாரிகளதே' என்று அமைச்சர்கள் கூறுகின்றனர். வியாபாரிகளைக் கேட்டால் 'நாங்கள் என்ன செய்வோம்? விலை இவ்வளவுதான்— மேலே கேட்கும் தொகை வரி' என்று கையை விரிக்கின்றனர். இது நிலைமை எனின் பொதுமக்களின் நிலை என்ன ஆவது?

வரிபோடுவதுதான் போடுகின்றீர்களே—அதனைத் தாங்க வல்லார்மீது போடுகின்றனரா எனின், அதுவும் இல்லை. செல்வர்களுக்குப் பயன்படும் இரண்டொரு பொருள்களுக்கு வரிவிதித்துவிட்டு, சராசரி மக்களுக்கு —நடுத்தர மக்களுக்கு—பயன்படும் ஏ ரா ள ம ா ன பொருள்களின்மீது வரி விதித்திருப்பதானது அரசினரின் கல்நெஞ்சைத்தான் காட்டுகின்றது. பாக்கும் தாப்பியும், தீக்குச்சியும் புகையிலையும், சோப்பும் பீங்கானும், என்றுள்ள, நடுத்தர மக்களின் வாழ்வில் அன்றாடத் தேவைப் பொருள்களாக உள்ளவற்றின்மீது எல்லாம் மத்திய அரசினரின் வரிக்கரங்கள் பட்டிருக்கின்றன. இப்பொருள்களைப் பணக்காரர்களைவிட ஏழை எளிய மக்களே மிகுதியாகப் பயன்படுத்துகின்றனர். 'நாங்கள் பணக்காரர்களுக்குத்தானே வரிபோடுகின்றோம்' என்று சொல்லிடும் அமைச்சர்கள் இந்தப் பொருள்கள் பணக்காரர்களின் தேவைக்குமட்டுமா உள்ளன என்பதை எண்ணிடவேண்டும்.

இப்படித் திரட்டும் வரிப் பொருள்களைக்கொண்டு என்னதான் செய்கின்றனர்? எங்கே போகின்றது அந்தப் பணம்? 'வேறு எ ங் கே போகின்றது—திட்டச் செலவுகளுக்குத்தான் போகின்றது' என்று கூறுகின்றனர். திட்டத்தின் பயன் மக்களின் வாழ்க்கையில் தெரியவேண்டும். அது தெரிகின்றதா எனின் அதுவும் இல்லை. நேற்று இருந்த நிம்மதி இன்று இல்லை. நேற்று இல்லாத வேதனை இன்று முளைக்கிறது. நாளுக்குநாள் வ ா ழ் க் கை, போராட்டமாகவும் திண்டாட்டமாகவும் மாறிக்கொண்டு வருகின்றது. திட்டங்களாலும் பலன் இல்லை; வரிக்கொடுமையும் வளர்ந்துகொண்டு வருகிறது. இவற்றிற்கெல்லாம் என்ன காரணம்? எங்கோ குறை இருக்கிறது என்பதுதான். என்ன குறைஅது? ஆளவந்தோரின் குறைதான். ஆட்சித்திறமையில்லாத குறைதான் என்று கூறுகின்றனர்.

என்ன செய்வது? எது செய்தால் இக்குறை நீங்குமோ, அதுதான் செய்யவேண்டும்.

தமிழ்நாடு அரசு, "இந்த ஆண்டு நாம் வரியேதும் விதிக்கவில்லை" என்று பெருமிதம் கொள்கிறது. அது கேட்க நமக்கும் மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறது—வரி விதிக்காத அரசைப் பாராட்டவும் தோன்றுகிறது. ஆனால், யாருக்கு வரிவிதிக்கப்படவில்லையோ, அவர்கள் வரி தாங்கமுடியவில்லையே என்று தவிக்கிறார்கள். டில்லிப் பேரரசு போட்ட வரி மாநிலம் முழுவதையும் பாதிக்கிறது. இந்த நிலையில் தமிழ்நாடு அரசு, நாம் வரியேதும் விதிக்கவில்லை என்று கூறுவதில் பொருள் இல்லை. இவர்கள் இப்படிக் கூறுவது, "நான் அடிக்க வில்லை, என் அப்பா அடிக்கிறார் — தாங்கிக்கொள்" என்று கூறுவதுபோல் இருக்கிறதல்லவா!

# தெளிவு பிறக்கிறது

டில்லிப் பேரரசின் ஆதிக்கப் போக்கினையும், அது, ஏனைய மாநிலங்களை சுரண்டித், தனக்கு (வடக்கு) பலமும் நல்வாழ்வும் தேடுவதில் எத்துணை கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறதென்பதனை நாம் கடந்த பதின்மூன்றாண்டுகளாகவே எடுத்துக்காட்டி வந்திருக் கிறோம்.

எந்த ஒரு திட்டம் வகுத்தாலும், அது, தங்களுக்கு (வடக்கே வாழ்பவர்களுக்கு) வளமளிக்கும் வகையில் அமைகிறதா என்பதனை ஆராய்ந்தறிந்து அதற்கேற் பச் சூழ்நிலைகளை உண்டாக்கி, மற்ற மாநிலங்களின் வாயில் மண்போடும் விதமாக நடந்து கொள்கிறதென் பதனையும் விளக்கி வந்துள்ளோம்.

என்றாலும், இங்குள்ள ஆளவந்தார்கள் நம்முடைய நியாயமான எந்தக் காரணத்தையும் ஏற்பதில் தயக்கம் காட்டி, "இவர்கள் என்ன நமக்குக் கூறுவது" என்ற போக்கிலேயே நடந்து வருகின்றனர். எதிர்க்கட்சிக் காரர் என்றாலே இங்குள்ள ஆளவந்தார்களுக்கு ஏளன மாகப்படுகிறது. நல்லதைச் செய்யச் சொன்னால், "பொல்லாதவர்கள் இவர்கள்; இவர்கள் பேச்சைக் கேட்காதீர்கள்" என்று எங்கு சென்று எதைப்பற்றிப் பேசினாலும், நம்மைப்பற்றியும் பிற எதிர்க் கட்சிகளைப் பற்றியும் பேசுவதில் தங்கள் திறமை முழுவதையும் காட்டுகிறார்கள்.

ஆனால், இப்போது டில்லிப் பேரரசு கையாளும் முறைகள் பலவும் மாநில அரசுக்குப் பெருமளவில் தீங்கு பயப்பனவாக இருக்கிறதென்பதை உணரத் தொடங்கியுள்ளனர் இங்குள்ள அமைச்சர்கள்.

டில்லியின் போக்கைக் கண்டித்த நம்மை, யார் அதிக அளவில் தாக்கிப் பேசினார்களோ, அவர்களில் நமது நிதி அமைச்சர் அவர்களும் ஒருவர். அவரே இப்போது, மத்திய அரசின் அடாத போக்கினைக் கண் டித்து, "இது நியாயமற்றது—நேர்மை தவறியது" என்று எடுத்துக்காட்டி இடித்துரை கூற முன் வந்துள் ளார் என்பதை அறியும்போது, சாமான்யர்களாகிய நம்முடைய கருத்துக்கள் காலம் கடந்தாயினும் அவர் கள் உள்ளத்தில் உறைக்கிறது—உண்மை புலப்படு கிறது—தெளிவு ஏற்படுகிறது என்பது புலனாகிறது.

## திரு. சங்கரன் மறைவு

சென்னை மாநக்ராட்சித் துணை ஆணையாளர் திரு. என். சங்கரன் அவர்கள் 13---3---61 இரவு 9-30 மணியளவில் இயற்கையெய்தினார் என்ற செய்திகேட்டுப் பெரிதும் வருந்துகிறோம்.

காலஞ்சென்ற திரு. சங்கரன் அவர்கள் நீதிக் கட்சியில் ஈடுபாடுகொண்டு பெரிதும் உழைத்தவர். சென்னையில் காலஞ்சென்ற திரு. பாசுதேவ் அவர் கள் தலைமையில் இயங்கிய தொழிற்சங்கத்தில், அண்ணா, ஆல்பர்ட் ஜேசுதாசன் ஆகியோருடன் திரு. சங்கரன் அவர்களும் முன்னோடியாக விளங்கி யமை குறிப்பிடத்தக்கது.

அன்னார், 1938-ல் நடைபெற்ற இந்தி எதிர்ப் புப் போரிலும் கலந்துகொண்டு மிகுந்த உற்சாகம் காட்டியவர்.

சென்னை மாநகராட்சித் தேர்தலில் வெற்றி பெற்று உறுப்பினராக ஆறு ஆண்டுகள் பணியாற் றினார்.

அடுத்து, அதே மாநகராட்சியில் கல்வி அதிகாரி யாகப் பதவி ஏற்று, நகரெங்கணும் புதுப் புதுப் பள்ளிகளைத் தோற்றுவிக்கவும், இருக்கும் பள்ளிகளில் கல்வி வளம் உயரவும் பாடுபட்டார்.

குன்றாத--தளராத உழைப்பினால் 1947-ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி மன்றத் துணை ஆணையாளராக உயர்ந்தார்.

அவர் இருமுறை தற்காலிகமாக மாநகராட்சி ஆணையாளராகவும் பணியாற்றியுள்ளார்.

கடைசிவரையில் பொதுப் பணிகள் பலவற் றிலும் தம்மை ஈடுபடுத்திக்கொண்டிருந்தார். முது புலவர் மயிலை சிவமுத்து முதலியோருடன் கூடி நின்று மாணவர் மன்றத்தைக் கட்டிக்காப்பதில் ஆர்வத்துடன் ஒத்துழைத்துள்ளார்.

தமது 52-ஆம் வயதில் மறைந்த திரு. சங்கர னுக்கு, இரு ஆண்குழந்தைகளும், ஒரு பெண் குழந் தையும், மனைவியாரும் உள்ளனர்.

அவர்களையும், சக அதிகாரிகளையும் வருந்த வைத்து இயற்கையெய்திய திரு. சங்கரன் அவர் களின் தொண்டும் பண்பும் நம் நெஞ்சைவிட்டகல லாதது.

அன்னாரின் குடும்பத்தாருக்கு நம் இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

காஞ்சிபுரம்

19-3-'61.

தம்பி!

ஜெப்பர்சன் என்ற பெயருடையார் அமெரிக்கக் குடிஅரசுத் தலைவராக இருந்தார். அவர் ஓர் பொன்மொழி கூறி இருக்கிறார். "கோபம் எழும்போது, உடனே பதில் பேசி விடாதே! பேசுவதற்கு முன்பு 10 எண்ணிக்கை எண்ணிக்கொண்டிருந்துவிட்டுப் பேச ஆரம்பி—கோபம் அதிகமாக இருந்தால், பத்துப் போதாது, நூறு வரையில் எண்ணிவிட்டுப் பிறகுதான் பேசவேண்டும்."

நான் பல ஆயிரம் எண்ணிவிட்டுத்தான், பேசுவதோ, எழுதுவதோ வாடிக்கை. கோபம் கொதித்துக், கரைந்து, உலர்ந்து, பொடிப்பொடியாகித், தூளாகித் தூசியாகிக், காற்றோடு காற்றாகக் கலந்துபோகிற வரையில்கூடப், பதில் பேசாது இருக்கும் போக்கிலே, நிரம்பப் பயிற்சியும் உண்டு. அது தக்க பலனையும்—எனக்கு அல்ல—என் மூலமாக—நாட்டுக்குத் தந்துள்ளது என்பதையும் உணருகிறேன். கோபமே எழாதபடியான மனநிலை பெற வேண்டுமென்று விழைகிறேன்-வெற்றி எளிதிலே கிடைப்பதாகத் தெரியவில்லை; எனினும் முயற்சியைக் கைவிட்டுவிடுவதாகவும் இல்லை.

என்ன அண்ணா! இது! சென்ற கிழமை மடல் அனுப்பவில்லையே' என்ற கோபம் எனக்கு; நிரம்ப; அப்படி இருக்க, நீ, ஏதோ கோபத்தை அடக்கிக் கொண்டு இருப்பது பற்றிப் பேசுகிறாயே; என் கோபம், இதைக்கேட்டு, வளரத்தானே செய்கிறது—என்றுதானே தம்பி! கேட்கிறாய். உன் கோபம் நியாயமானது — மறுக்கவில்லை—ஆனால், என்நிலை, உணர்ந்துபார்த்தால், அனுதாபத்துக்கு உரியது என்பதனை அறிவாய். பல நாட்களாக நிறுத்தி வைத்திருந்த ஆங்கில இதழ், உன் வற்புறுத்தல் காரணமாக, மீண்டும் வெளியிடவேண்டிய நிலை—அதற்கான பணியும் சேர்ந்து, என்னைத் திக்குமுக்காடச் செய்துவிட்டது — எனவேதான், சென்ற கிழமை, உன்னுடன் அளவளாவும் அகமகிழ்ச்சியை நான் பெறமுடியாது போயிற்று. மணி பன்னிரண்டு, தம்பி! எழுதிக்கொண்டிருக்கிறேன் — இன்று எழுதாவிட்டால், இந்தக் கிழமை எழுத வேறு வாய்ப்புக் கிடைக்காதே என்பதால். பன்னிரண்டு என்று மட்டும்தானே சொன்னேன். தம்பி! இரவு!!

கோபம் கூடாது என்று நான் கூறினேன்—கோப உணர்ச்சி எழவிடக்கூடாது என்று கூறினேன்-ஆனால், எத்தகைய கோபம், என்பதை விளக்கவேண்டும். நம்மைப் பற்றித் தவறாகவோ, பகையுணர்ச்சி காரணமாகவோ, தூற்றவேண்டுமென்றே, எவரேனும் ஏதேனும் பேசினால், செய்தால் எழக்கூடிய கோபஉணர்ச்சிக்குத்தான் இடமளிக்கக்

**எண்ணப் பிணைப்பு!**
**இதயக் கூட்டு!**
**வண்ணக் கலவை!**

கூடாது, என்றேன். நமது நாட்டை எவனேனும் இழித்துரைத்தால், மொழியைப் பழித்தால், கழகத்தின்மீது பகை உமிழ்ந்தால், கொள்கைகளை இகழ்ந்தால், முயற்சிகளை ஏளனம் செய்தால், கிளர்ச்சிகளை அழித்திட முனைந்தால், எழக்கூடிய உணர்ச்சிகளை அடக்கிவிட வேண்டும், அவைகளுக்கு இடம் கொடுக்கக்கூடாது, என்று கூறுவதாக எண்ணிவிடாதே. அந்த உணர்ச்சி தான், உலகைத் திருத்த, உரிமைகளைப்பெற, உயர்வை அடையப் பயன்பட்டு வந்திருக்கிறது! அத்தகைய உணர்ச்சியால் உந்தப்பட்டவர்கள்தான், விடுதலைபெறக் களத்திலே இறந்தனர்; இறவாப் புகழ்பெற்றனர்; உரிமை காக்கத் தூக்குமரம் ஏறினர்; தாம் மடிந்து மற்றவர்களை வாழவைத்தனர். கவிதையும் காவியமும், அந்த உணர்ச்சி பொங்கிவழிந்தபோது காணக் கிடைத்த வடிவங்களே! எழுச்சிமிக்க கிளர்ச்சிகளை, அந்த உணர்ச்சிதான் தூண்டிவிட்டது! மனித குல முன்னேற்றமே, அந்த உணர்ச்சியின் காரணமாகத் தான் ஏற்பட்டது. எனவே, தம்பி! கோபமும் கொதிப்பும் எழலாகாது என்று நான்கூறும்போது, ஏற்படினும், அந்த உணர்ச்சியால் ஆட்டிப்படைக்கப்படும் நிலைமைக்கு நம்மை ஆளாக்கிக்கொள்ளக்கூடாது என்று கூறும்போது, அருள்கூர்ந்து, பொது நோக்கத்துக்காக, பொது நலனுக்காகத், தூயகொள்கைக்காக, விடுதலைக் கிளர்ச்சிக்காக, நாம் மேற்கொள்ளும் முயற்சிகளைக் குலைத்தும் பழித்தும், எதிர்த்தும் ஏளனம் செய்தும், இன்னல்மூட்டியும், இழிவைத் தூவியும் சிலரோ, பலரோ இருப்பரேல், அப்போது, உணர்ச்சியற்றுக் கிடக்கச் சொல்கிறேன் என்று எண்ணிக்கொள்ளாதே. அப்போது உணர்ச்சி ஏற்படுவதுதான், உள்ளத்திலே கொள்கைப்பற்று இருப்பதற்கே அடையாளம்.

உனக்கென்ன தெரியும்? என்று ஒருவன் கேட்கும் போது, கோபம் எழத்தேவையில்லை, ஏற்பட்டுவிடினும், கண்சிமிட்டிச், சிரிப்பொலி எழுப்பி, ஆமப்பா! எனக்கு ஒன்றும் தெரியாது! என்று செப்பிவிடலாம்; கஷ்டமும் இல்லை; நஷ்டமும் இல்லை. உன்னால் என்ன ஆகும்? என்று ஒருவன், ஆணவத்தை அறிவின் முதிர்ச்சி என்று நம்பிக்கொண்டு, நம்மைக் கேட்டிடின், ஒன்றும் ஆகாதப்பா! என்று கூறிவிடுவதால், நமது ஆற்றலும் அழிந்துவிடாது, மரியாதையும் மங்கிவிடாது; ஆனால் உன் தமிழ்மொழியில் என்ன உண்டு? உன்தாய்மொழியால் என்ன ஆகும்? என்று கேட்க ஒருவன் முற்பட்டால், உணர்ச்சியற்றுப், பதிலளிக்காதிருந்தால், மரபும் மானமும், நாடும் மொழியும் ஏளனத்துக்கு இலக்காகிச் சிதைவுபடும்; ஈடுசெய்ய முடியாத நஷ்டம், துடைக்க முடியாத பழி, போக்கமுடியாத கறை, அப்போதுதான் ஏற்படும். எனவே, நம்மைத் 'தனிப்பட்ட முறையில்' தாக்கியோ, தரக்குறைவாகப் பேசியோ, இழிவுபடுத்த ஒருவன் முனைந்தால், தாங்கிக்கொள்ளலாம், கோபத்தை அடக்கிக்கொள்ளலாம். ஆனால், தமிழர் என்ற இனத்தை, தமிழ்மொழி என்ற நமது தாய் மொழியை, நமது மரபினை இழித்தும் பழித்தும் பேசினால், தாங்கிக்கொள்ளும் அளவும்கூட அறமாகாது; உணர்ச்சியே எழவில்லை என்றால், தமிழ் இனம் வாழாது.

வெள்ளையரை முதலில் எதிர்த்த பெரியவர்களையே எடுத்துக்கொண்டு பார்த்தாலும், இது புரியும். அவர்களுக்குத், தனிப்பட்ட முறையிலே, வெள்ளையர்களால் ஒரு இழிவும், இன்னலும் ஏற்பட்டதில்லை; மாறாகப், படித்தவாகள், வசதிபெற்றவர்கள், மேட்டுக்குடியினர், என்ற முறையில், அவர்களைத் தட்டிக்கொடுக்கப், பட்டம் அளிக்கப், பதவி தந்திடப், பரிவு காட்டிட, வெள்ளை அரசு தயாராகக்கூட இருந்தது; எனினும், நாடு கெடுகிறது, மக்கள் மதிக்கப்படுவதில்லை, தொழில் நசிந்து போகிறது, வறுமை தாண்டவமாடுகிறது. என்ற பொது நிலைமைகளைக் கண்டுதான் அவர்கள் ஆத்திரமடைந்தனர்; எழுச்சிபெற்றனர்; தொடுத்தனர் போர்; பெற்றனர் வெற்றி.

அஃதே போன்றே, இன்று, டில்லிப் பேரரசு, நம்மில் யாரையும், தனிப்பட்ட முறையில் தொல்லைகொடுத்துக்கொண்டும் இல்லை, இழிவு படுத்தியும் வரவில்லை; ஆனால், நமதுநாடு, மொழி, மரபு பாழாக்கப்படுகிறது; நமது மக்களின் வாழ்வு இருண்டுகிடக்கிறது; தொழில் பட்டுப்போனவண்ணமிருக்கிறது என்ற 'பொது நிலை'மை தான், நம்மை, டில்லிப் பேரரசை எதிர்த்தாகவேண்டும் என்ற எழுச்சிகொள்ளச் செய்கிறது.

தம்பி! தனிப்பட்டவர்களுக்குத் தனிப்பட்ட காரணங்களுக்காகக், கோப உணர்ச்சி கொதித்தால் அவர்களுக்கு உள்ளபலமும் போய்விடும்; மற்றவர்கள் கண்டு எள்ளி நகையாடவும் செய்வர். ஆனால், பொது நல நோக்கத்துக்காக, இனத்துக்காக, மொழிக்காக உணர்ச்சிப் பிழம்பாக நாம் மாறும்போது, புதியதோர் வலிவு பெறுகிறோம்; காண்போர் கனிவு காட்டுகின்றனர்; அவர்களேகூட, எழுச்சி பெற்றவகளாகிவிடுகின்றனர்.

ஜுரவேகத்தில் இருப்பவனை, நாலுபேர் சேர்ந்து அழுத்திப் பிடித்தாலும், கெம்பிக்கொண்டு எழுவான்; அது வலிவின் அடையாளமல்ல; நோயின் தன்மை. கட்டான உடலை, உடற்பயிற்சி முறைகளால், மேலும் வலிவுள்ளதாகவும் பொலிவுமிக்கதாகவும் ஆக்கிக் கொண்டால், பத்துப்பேர் பிடித்திழுத்தாலும், நிலைகுலையாத தன்மை கிடைக்கும்; அது உண்மையான வலிவுக்கு அடையாளம்.

தனிப்பட்ட காரணத்துக்காக ஏற்படும் கோபம் எழுவதும், விரைவில், முறிவதும், அஃதேபோல! இன

லே, பிறகு எண்ணிப்பார்த்தால், வெட்கப்படத்தக்க, ப்பரிப்பு இருக்கும்.

பொது நலனுக்காக உணர்ச்சி ஏற்படுவது எளிது ல, எல்லோருக்கும் ஏற்பட்டு விடுவதுமில்லை; விரை லேயும் ஏற்பட்டுவிடாது. ஏற்பட்டான பிறகோ, அந்த ழுச்சியை அழித்தொழிக்க வல்லது எதுவும் இருக்க டியாது என்று கூறலாம்; அவ்வளவு நேர்த்தியான க எழுச்சி இருக்கும்.

எஃகு, எளிதிலே தயாரிக்கப்படுவது அல்ல; ரும்பு காய்ச்சிக் காய்ச்சி ஊட்டம், அழுத்தம், எறி, றி, எஃகு ஆக்கப்படுகிறது, எஃகு ஆக்கப்பட்ட றகே, எதையும் தாங்கும் நிலை பெறுகிறது; வளையாது, றியாது. எனதருமைத் தம்பியரெலாம் எஃகுக் கம்பி ளாக வேண்டும் என்பது தானே எனக்குள்ள அவா! ற்றாரின் ஏளனம் செவியில் விழத்தான் செய்கிறது, ஃகுக் கம்பிகளா, உன் தம்பிகள்!! ஆமாம்! வேறு ப்படி இருப்பார்கள்; தங்கக் கம்பிகளாகவா இருக்க டியும்!'' என்கின்றனர். தம்பி! நமது 'இல்லாமை' யக் குறை கூறுகிறார்கள், இயல்பை அல்ல; எனவே, தைக் கேட்டு நமக்குக் கோபம் எழத் தேவையு ல்லை.

அண்ணா! எல்லா நல்லுரையும் சொல்லுகிறாய், திலே வல்லமை பெற்றிருப்பதால்; ஆனால், உன்னை ம் தான் சிலர் சொல்லுகிறார்கள் 'கோபம் வந்தது'— ன்று, எனச் சொல்லத் துடிக்கிறாய்; தெரிகிறது, ம்பி! நானே, அதைக் கூறத்தான், இந்தப் பிரச் னையையே தொடங்கினேன்.

காங்கிரஸ் நண்பர்கள், நான், சென்ற கிழமை ட்ட மன்றத்தில் கோபமாகப் பேசினேன் என்று குறை ட்டுக் கொள்கிறார்கள். கோபமும் கொதிப்பும் கூடாது ன்று ஊருக்கெல்லாம் கூறி விட்டு, இவர் மட்டும் த்திரத்தைக் கக்கலாமா, கோபமாகப் பேசலாமா, ன்று கேட்டனர்; அறிவேன்.

சிலர், உன்னிடமும் வந்து, இதனைக் கூறி இருக்கக் டும். எனவே தான், கோபப் படாத அண்ணன், கோபமாகப் பேசக் காரணம் என்ன என்று கூற ண்ணுகிறேன். என்ன பேசினேன் என்பது தான், தழ்களில் ஓரளவு வந்திருப்பதால், உனக்குத் தெரி மே. என் கோபத்துக்காரணம், நான் இகழப்பட்டதால் அல்ல; என்னை எவரேனும் ஏளனம் செய்ததால் அல்ல. அந்த மாதிரி நேரங்களில் நான், மரக்கட்டை, தம்பி! ஆமாம்!! ஆனால், நமது கழகத்தை மிகக்கேவலப்படுத்தும் முறையில், அமைச்சர் சுப்ரமணியம், சட்டமன்றத்தில் பேசினார். நிதிநிலை அறிக்கையும், தொழில் நிலை விளக் கமும், பொது நிலை அறிவிப்பும், புதுத்தொழில் துவக் கமும், ஆகியவை குறித்துப்பேசவேண்டிய மன்றத்தில், ஆட்சிப் பொறுப்பதனை ஏற்று, ஆற்றல் மிக்கவர்கள், அனுபவ மிக்கவர்கள், ஈடு இணையற்றவர்கள், ஆளப் பிறந்தவர்கள், அவனி அறிந்தவர்கள் என்றெல்லாம், விருதுகளைச் சூட்டிக் கொண்டுள்ள விவேகிகள், நொந்து கிடக்கும் நமது கழகத் தோழர்களின் மனதை மேலும் புண்படுத்தும் முறையில், ஆணவத்தின் முகட் டினில் நின்றுகொண்டு, பழித்துப் பேசினர்.

உங்கள் யோக்யதைதான், சந்தி சிரிக்கிறதே! என்று செப்பினாராம், கொங்கு நாட்டுக் கோமகன், கனம், சுப்ரமணியம், வெல்வெட் மெத்தையிலே சாய்ந்தபடி, விழியிலே கேலி வழிய, நமது தோழர்களைப் பார்த்தபடி.

கட்சிகளிலே, எது கல கலத்துப் போய்க்கொண் டிருக்கிறது, எதிலே குழப்பம் மூண்டு கிடக்கிறது, உட்பகையும்உருக்குலைக்கும்சதியும் எங்குபுற்றரவுபோல் இருந்துகொண்டிருக்கிறது, என்பதுபற்றிய ஆய்வுரை நடத்த அல்ல, சட்டமன்றம் நடைபெறுவது. எந்த வரி, மக்களை எந்த வகையிலே தாக்கும்; என்ன தொழிலைத் துவக்கினால், மக்களுக்கு நன்மை பெருகும், என்ற இவைபற்றிய விளக்கம் அளிக்கச் சட்டமன்றம் நடை பெறுகிறது. போதை ஏறிய பூபதி, இருக்கையில் புரண்டபடி, எதிரில் தெரியும் எவரையும் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசிடும் பான்மைபோல, எண் ணிக்கை என்பதன்றி ஏற்றம் உள்ளது என்றுரைக்க வேறேதும் இல்லாதார், இறுமாந்து கிடப்பதும், தொடர் பேதுமற்ற முறையில், நமது கழகத்தைப் பழித்துரைப் பதும்; எற்றுக்கு.

இவர் ஒரு அறிஞரா? என்று கேட்டுவிட்டு, இடி இடியெனச் சிரிக்கட்டும்; நான் கோபம் கொள்ளமாட் டேன்; பொருட்படுத்தக்கூடமாட்டேன். இந்தக் கழகத் தின் யோக்யதை தெரியாதா, சந்தி சிரிக்கிறதே! என்று கழகம் காண, கட்டிக் காத்திட, கலாம் எழாதபடி தடுத் திட, உழைத்து உயர்த்திட, ஊர் நலனுக்கு உகந்ததாக் கிடப், பாடுபட்டுக்கொண்டு வரும், நமது தோழர்களின் காதிலே நாராசம் பாய்ச்சுவதுபோல, ஏசுவதா—ஒரு அமைச்சர் — படித்தவர் — பண்பு அறிந்தவர் என்று பேசப்படுபவர்.

நான் கோபம் கொண்டேன் என்பது உண்மை; ஆனால், என் பொருட்டு எழுந்ததல்ல அந்தக் கோபம்; உன்னையும் என்னையும் ஆளாக்கிவிட்டதும். இந்த அமைச்சர்களுக்கேகூட முன்பு எப்போதும் ஏற்படாத அளவு மதிப்பை, வலிவை, கவனிப்பை, மேய்ப்பைத், தேய்ப்பைப் பெற்றுத் தருவதுமான கழகத்தைக் கேவ லப்படுத்துகிறார்களே என்பதால் ஏற்பட்டது.

முட்டாளே!—என்று ஒருவன் சொன்னால் ஏற்படக் கூடிய கோபத்தைவிட, முட்டாள்பய மகனே! என்றால், எழக்கூடிய கோபம் அதிகமாக அல்லவா இருக்கும்.

கழகத்தில் உள்ள தனிப்பட்டவர்களைத் தாழ்வாகப் பேசுவதைக்கூடத் தாங்கிக்கொள்ளலாம்—நாக்கு அப்படி ஆகிவிட்டது, நாராசத்தில் பட்டுப் பட்டுக் கெட்டுக் கிடக்கிறது என்று எண்ணிக்கொண்டு இருந்துவிடலாம்—ஆனால், நம்முடைய கூட்டு முயற்சி, குலக்கொழுந்து, மரபு காத்திடும் மாவீரர் மன்றம், விடுதலை வீரரின் பாசறை என்ற நிலைபெற்றுத் திகழும், கழகத்தைத் தரக்குறைவாகப் பேசுவது, அதைக் கேட்டுக்கொண்டு, நாம் வாளா இருப்பது என்றால், அமைச்சர், நம்மை என்ன அவ்வளவு உணர்ச்சியற்ற உதவாக்கரைகளாகவா கருதிவிட்டார். எதனால்? நம்மிடையே, வெளியே தெரியும்படி, கிளம்பிய, சில கருத்து வேற்றுமைகள் காரணமாகவா? இதுவா அமைச்சருக்கு, இத்துணைத் துணிவினைத்தருவது? நாமே, நடந்துவிட்டதை எண்ணி எண்ணி, நெஞ்சு நெக்குருகிக் கிடக்கிறோம்—மற்ற எந்தக் கட்சிகளிலும் மாடுபிடி சண்டை வரலாம், மண்டை உடையும் அமளி நடக்கலாம், கழுத்தறுப்பு வேலைகள் நடக்கலாம்; கல்லைத் தூக்கி மண்டையில் போட்டிடும் பாதகம் நடைபெறலாம் — அவை சமுகத்தை, நாட்டை, இனத்தை, மரபைப் பாதிக்காது; பங்குச் சண்டை என்று மக்கள் பரிகாசம் செய்வதோடு விட்டுவிடுவர்—நமது கழகம் அப்படிப்பட்டதல்ல— இது ஏழையின் இல்லத்துக்கு ஒளி அளிக்கும் அழகு மகள் போல இருக்கிறது; இருள் சூழ்ந்த நெடுவழி கடக்கக் கிடைத்திட்ட அகல்விளக்காக இருக்கிறது; சோர்ந்து போனவன், கடுவழி சென்றிடப், பயன்படும் ஊன்றுகோலாக இருக்கிறது; இதற்கு ஒரு ஊறு நேரிட்டால், இதிலே ஒரு குலைவு ஏற்பட்டால் அது நாட்டுக்குப் பேரிடியாகும்; விடுதலை முயற்சிக்குப் பெரியதோர் விபத்தாகிப் போகும் என்று எண்ணி எண்ணி, மனம் குமுறிக் கிடக்கிறோம்; இதனை அறிந்திட ஆற்றலற்று, உணர்ந்திடும் அளவு மனிதத் தன்மையற்றுச், சந்தி சிரிக்கிறது என்று கேலி பேசுவது—இதுவோ அமைச்சரின் கடமை!

> "மூட மகனே! மொழியொணு வார்த்தையினைக்
> கேடுவரல் அறியாய், கீழ்மை யினுற் சொல்லிவிட்டாய்
> புள்ளிச் சிறுமான்புலியைப்போய்ப் பாய்வதுபோல்
> பிள்ளைத்தவளை பெரும்பாம்பை மோதுதல்போல்......"

என்னவோ பேசிவிட்டீர் அமைச்சரே! என்று கூறக்கூட நம்மில் எவரும் எழமாட்டார்கள் என்று எண்ணிக்கொண்டாரோ? பாரதியார் ஆக்கித்தந்த பாஞ்சாலி சபதத்தைத்தான் அவரும் பார்த்ததும் இல்லைப்போலும்! பாரெல்லாம் தன் அடியில் படுத்துக்கிடப்பதுபோல், பண்பெல்லாம் தம்மடியில் அடப்பத்தில் அடக்கிப் போட்டிருப்பதுபோல், கட்டிப்போட்ட வேங்கைமீது கல் வீசிக் கைகொட்டிச் சிரித்திடும் ஓர் பித்துப்பிள்ளை விளையாட்டினை ஓர் வீரச் செயலெனக் கொண்டவர் போலாகிப், பேசிவிட்டார் சுடுசொல், வீசிவிட்டார் இழிசொல்—கேட்டவர் இருக்கின்றார், நாட்டவர்க்கு உரைக்கின்றோம்.

தம்பி! கழகத்தின் போக்குப்பற்றிச் சந்தி சிரிக்கிறது என்று அமைச்சர் செப்பிக்கிடந்தபோது, அவரை அமைச்சராக்கிவைத்த அரும் காங்கிரசு உள்ள நிலை யாது என்பதனை எவரே அறியாதார்! பாஞ்சால நாட்டினிலே, படுகளமானநிலை! பண்டித நேருவின் தொட்டிலெனக் கூறிடலாம் பாரத அரசுக்கே சூத்திர தாரி எனப் பட்டம்பெற்று விளங்கும், உத்தரப்பிரதேசம்; ஆங்கு கொள்கையால் வந்ததல்ல, செயல்முறைக்கு ஏற்றஒருதிட்டம் எதுவென்று பேசிவந்ததாலல்ல, மந்திரியாய் இருந்திடவே, யார் வாய்ப்புப்பெறுவது? உனக்கா! எனக்கா? என்று ஒரு கை பார்த்திடலாம், உன் பக்கம் உள்ளவர் யார்? உமக்குள்ள கருவி எது? உடனே உரைத்திடுக! காலம், களம், குறிப்போம்! மாண்டவர் போக மீதம் உள்ளவர்களே, உத்தரப்பிரதேசத்து ஆட்சி!!—என்று கூறியன்றோ, இருதரப்பு மோதிற்று. சென்று சென்று வந்தாரே, செயல்வீரர், நேருபிரான்; கண்டபலன் என்ன? கலாம் தீர்த்துவைத்தாரோ? கைகொட்டிச் சிரிக்காதார் எவர் உண்டு, அறியோமா? போனவர் போகட்டும், புதியவர் ஆளட்டும்; ஆள்மாறி விட்டாலும், அனைவருமே கதர் அணிவோர்; ஆகவே, அவருக்கும் ஆதரவு தந்திடுவோம் — என்று கூறினர் ஆங்குள்ள காங்கிரசார். இன்னும் எத்தனை நாள்? பார்த்தேவிடுகின்றோம்! இது குறித்துப் பண்டிதர்தான் எது கூறி நின்றாலும், எமக்குக் கவலை இல்லை! எம்மை இம்சித்தார்தம்மை விடமாட்டோம்! இஃதே எமக்கின்று தேசியம், ஆமாம்! என்று சம்பூர்ணனந்தர் சாற்றுகின்றார்; அது கேட்டுக், குப்தா கூட்டத்தார் குலைநடுக்கம் கொள்கிறார்; இருதரப்பும் எழுப்பிடும் இரைச்சலைக் கேட்டன்றோ, இனி நாம் இருந்து இதனைத் தாங்குவதும் இயலாதென்று, முதுபெரும் கிழவர், காங்கிரஸ் மூலவரில் முந்தியவர், கோவிந்த வல்லபபந்தும் உயிர் நீத்தார்! ஒன்றல்ல இரண்டல்ல, உள்ள ஓட்டைகள்! எங்கும் உடைப்பு, விரிசல்; காழ்ப்பு, கலாம்; அறிக்கை, மறுப்பு; ஆள்பிடித்தல் கோள்மூட்டல்; ஆந்திரம்விலக்கில்லை; மைசூர் பெருந்தொல்லை; என்ற நிலை காண்போர், என்ன செய்கின்றார் என்று, எம்மை இழிமொழியால் ஏசிய அம்மந்திரியார் கிஞ்சித்தேனும் எண்ணிப்பார்த்தாரா; அவர் அறிவு ஏனோ அதுசமயம் அவர்க்குத் துணைசெய்யவில்லை.

சந்தி சிரித்ததென்றார்; தன் முதுகுப் புண்ணை தனைத்தான் காணுதான், மற்றொருவன் முகம் தன்னில் இருந்திட்ட மசு, மருவு, தான்கண்டு.

ஏன் அமைச்சர் அது போல, ஏளனம் செய்தார் என்று சிறிது நாம், தம்பி! சீர்தூக்கிப் பார்த்திட்டால்,

சிந்தை தெளிவதுடன், சிறப்பான புதுப்பாடம், கண்டு பயன் பெறலாம்; கருத்துக் கருஊலம்.

கோபம் எழவே தான் அன்று, கோலோச்சுபவர் எனினும், கொடுமைக் கணைகள் தமை என் மீது வீசி டவும் அதிகாரம் கொண்டவர்கள் தான் எனினும், மன திற்பட்டதனைக் கூறுது இருந்திடுதல், மரபுக்கு அழ கல்ல, என்பதனுல், எதிர் வீட்டுப் பலகணியை எட்டிப் பார்த்திடும் போக்கு நல்ல தல்ல, அமைச்சரே! விட்டு விடும் அச்செயலை என்று கூறி விட்டேன்.

கோபம் குறைந்ததா? என்று கேட்கின்ருய், தம்பி! ஆமாம், அது உண்மை. ஆனல் சோகமன்ரே, வந் தென்னைத் துளைக்குதடா, தம்பி! எதனுலே எவரெவரோ, ஏசுகிருர் நம்மை? எண்ணிப் பார்த்தனையா, இதற்கான காரணத்தை? சின்னத்தனமாக நாம் நடந்து கொண் டோமா? இல்லை! எவரும் எண்ணிப் பார்த்திடக் கூசும் விதமான, நாட்டு விடுதலை எனும் திட்டம், நமது என்று கூறிவிட்டோம். பத்து நாள் பேசுவர், புளித்துப் போகும் அவர்க்கே, பிறகு பக்கம் வந்து நிற்பர், பராக்குக் கூறிப் பிழைப்பர், என்று தான், நம்மைப்பற்றி மாற்ருர், முதலில் கணக்கிட்டார். இளைஞர், பெரும்பாலும். இல்லாதார், எல்லோரும். இவர்கள் எத்தனை நாள் என் நாடு! என் அரசு! என்றெல்லாம் பேசுவர்; எவர் கேட்பர் இவர் உரையை! நாடு, இவர் பக்கம், நாட்டம் செலுத்தாது. வீடோ, வறுமைக் கூடம்! என் செய்வர், இவரெல்லாம். பிழை பொறுப்பீர், ஐயன்மீர்! வழி அறியாமல் சென்ரேம், வதைபட்டோம். ஏதோ சிறு பதவி எமக்கென்று அளித்து விட்டால், இவர் போல் இத் தரையில் எவர் உண்டு! என்று ஏத்தித் தொழுது கிடக் கின்ரேம், தொல்லை எம்மால் வராது! என்று நாம் கூறிடுவோம், எதிர்ப்பு ஏதும் இருக்காது என்றுதான் எண்ணிக் கிடந்தார்கள், இந்த அமைச்சரெல்லாம். காத்திருந்து பார்த்தார்கள்; காரியம் பலிக்கவில்லை; கடுங்காற்றுப் போல் கழகம் கொள்கை பரப்பிற்று. காணுரும் கால் முடமானுரும், கடுகி நடந்து வந்து கனிவுடனே பார்த்து, நம்மை, கழகம் சேர்ந்திடுவோம், மீட்டிடுவோம் நம் நாடு! என்று கூறலுற்ருர். ஏதேது, இக்கழகம், காளான் போல் பூத்துக், கடுகி அழியு மென்று எண்ணி ஏமாந்தோம்—ஆல் போல் தழைத் திடும் என்று அச்சம் கொண்டிடத் தக்க விதமாகக் கழகமது வளருவது, ஆபத்து; எனவே இதனை அழித் திட நாம் எப்பாடு பட்டேனும், முனைந்திடுதல் முதல் வேலை!—என்று பேசி நின்ருர். அந்த வேளையினில், நமக்குள் ஐயப்பாடுகள் எழ, அமளியாக இது வடி வெடுக்கும் என்று பல் விளக்கிக் கிடந்தார்கள், பகை முடித்து, நம்மை ஒழித்து, பசி தீர்த்துக் கொள்ளலாம் என்ற நப்பாசை கொண்டவர்கள். கழகம் என்ன, கூளமா காற்றினில் பறந்து போக? **எண்ணப் பிணைப்பு இதயக் கூட்டு! வண்ணக் கலவை! எனவே, பேதம் என்பது ஏதுமில்லை, என்று அறிவித்து விட்டது அணி வகுப்பு. அதனுல் வந்த ஏமாற்றம், அமைச்சரை அது போலப் பேசவைத்தது.**

எனவே தம்பி! அமைச்சருக்கும், அவர் போன்ருருக்கும் அறைகூவலாக, நமது கழகம் நிலைத்து நிற்பது மட்டுமல்ல, ஓங்கி வளரவேண்டுமே, அதற்கு ஆவன செய்திட நாம், நம்மைப் பக்குவப்படுத்திக்கொள்ள வேண்டாமா? என்பதனை எண்ணும்போதுதான், சோகம் கப்பிய நிலை என்றேன் நான்.

நீ, எப்போதும் இப்படித்தான் அண்ணு! எத்துணை வெற்றிகளை நான் பெற்றளித்துக் காட்டினுலும், இது தானு? என்று கேட்பதும், இன்னும் உளதோ ஏராளம்; செய்திட, உன்னல் முடியுமா? என்று உசுப்பி விடுவதுமே உன் வாடிக்கை, நான் அறிவேன்!—என்று தானே தம்பி! கூற எண்ணுகிருய். நானறிவேன், உனை நன்ருய். நம்பிக்கைக் குறைவல்ல, நான் பேசும் காரணம். நமக்குள்ளே கலாம் வந்து நாசமாய்ப்போவோம் என்று எண்ணினவர் ஏமாந்துபோனதாலே, இனி நம்மைத் தாக்குவதில், முறை என்ன? நெறி யாது? என்று கூட எண்ணுமல், அழிப்பதற்கு என்னென்ன உண்டோ, அவ்வளவும் அவிழ்த்துவிட்டு, ஆர்ப்பரிப்பார். அவை தமைத் தாங்கிடவும், அறநெறியை அப்போதும் காத் திடவும், நாம் முனைந்துநிற்கவேண்டும். அச்சம் கொண் டிட ஒரு அணுவளவும் காரணமில்லை. மச்சுமீதேறி நிற் போர், மேலோர் ஆகார்! தரையினிலே நாம் நின்ருல், தரம் குறைவு என்ருகாது.

சந்தி சிரிப்பதாகச் சாற்றினுரே, அமைச்சர்! தம்பி! அவர்தம் கட்சியிலே உள்ளநிலை, அங்காடியில் இன்று அடிபடுவது, அறிவேன் நான்.

இன்று அங்கு, மண்டலக் காங்கிரசுக்கும், இளைஞர் காங்கிரசுக்கும், மடிபிடிச் சண்டை.

நடமாட வக்கின்றி, நாவசைக்க அறியாமல், கிடந் தார் இப்பெரியோர்கள், தலைவர்களாய்; அவ்வேளை, நாங்கள் கிளம்பி வந்தோம், நாப்பறையால் நாடதனில்

## காரணம்!

*தமிழ்நாட்டில் குற்றங்கள் அதிகரித் திருப்பதற்கு, அதாவது, மற்ற மாநிலங்களை விடத் தமிழ் மாநிலத்தில் மட்டும் குற்றம் செய்வோர் தொகை அதிகமாக இருப்பதற் குக் காரணம் என்ன வென்ருல், மற்ற மாநி லங்களைவிடத் தமிழ் மாநிலத்தின் வாழ்க் கைச் செலவு உயர்ந்திருப்பதுதான், என்று 1959-ம் ஆண்டு அறிக்கை கூறுகிறது.*

கட்சி வளர்த்திட்டோம்; காங்கிரசுக்குக் கிழப்பருவம், கண் மங்கி, வாய் குளறி, ஈளை கட்டி, இருமி இழுத்துக் கிடக்குது என்ற பேச்சை மாய்த்திட்டோம், இளைஞர் காங்கிரசதனல்! புது இரத்தம் எம்மாலே! புது முறுக்கு, எமது பணி!—என்ற எக்காளம், எழுப்பினர் இளைஞர் காங்கிரசார், குற்ருலத்தில் கூடிக், கொடி நாட்டிக், கூட்டம் சேர்த்து.

அதனை நாம் மறுத்தோமா? ஆமாம், உமது ஆற்றல் தன்னல், ஆங்காங்கு அடிதடியும் அமளியும்தான் என்ருலும், பேச்சுக்கு வழிகோலி, பெருந்தொண்டு செய்துள்ளீர், பாராட்டு, நன்றி—வேறு என்ன கைம்மாறு? என்று பெருந்தலைவர்கள் பேசிடவே, கொதித்தது கோபம், தடித்தன வார்த்தைகள்.

என்னதான் உள்ள குறை, எடுத்துக் கூறிடுக! என்று கேட்டிடவே, இளைஞர் காங்கிரசார், கூறலுற்ருர்.

அடுத்து வருகின்ற பொதுத்தேர்தலுக்கு, யாரரரை எங்கெங்கு நிறுத்துவது, என்பதனை, யாரோ சில பேர்கள் கூடி முடிவுசெய்தால், கேடாகத்தான் போகும்; அந்தக் காரியத்தை அருமையாகச் செய்யும் ஆற்றல், எமக்குண்டு, அறிந்திடுவீர்!—என்று கூறினர், இடித்துரைக்கும் போக்குடனே.

பிள்ளைகளா! இது கேளும்! பெரியவர்கள் பார்த்துச், செய்வது, இந்தத் தேர்தல் வேலை—பேச்சாலே, தேர்தலிலே பெரும் வெற்றி கிடைக்குமென்று, எண்ணுதீர்—தவருகும். எங்கெங்கு எவரெவருக்கு என்னென்ன விதமான செல்வாக்கு என்பதனைக் கண்டறிந்து, இடம் கொடுக்கத் திறம் வேண்டும்—தனித்திறமை! மேடை பல ஏறிவிட்டால், கூடி விடுவதல்ல அந்தத் திறமை. அதற்கே மெத்த முறையுடனே அமைத்துள்ளோம், மண்டலக் காங்கிரஸ். மேதாவிலாசம் உண்டு, மேட்டுக் குடியினர் உண்டு, இரும்புப் பெட்டி உண்டு, கரும்புத் தோட்டம் உண்டு, வடபாதி மங்கலத்தார், வலங்கைமான் உறைவார். பூண்டிப்பதி மேவும் வாண்டையார், வானூரார். கானூரார், வகைவகையாய் நாம் அறிவோம். அவரெல்லாம் சேர்ந்தது தான், மண்டலக் காங்கிரசு. அதுதான், ஆள் பொறுக்கும்; அறிவிக்கும் வேலை உமக்கு—என்று தலைவர்கள் கூறிடவே, இளைஞர் காங்கிரசார் எரிச்சல் மிகக் கொண்டு, இதுதான் முறை என்ருல், எமக்கு இங்கு வேலை இல்லை! மண்டலமோ கமண்டலமோ, எதுவானல் எமக்கென்ன என்றனராம் கோபம் மிகக்கொண்டு.

இதுமட்டுந்தானு? சென்னை செங்கற்பட்டு, தென் ஆற்காடு தன்னுடனே, வட ஆற்காடும், எந்தன் வசம் விட்டுவிடும் என்று, வேளாண் குடிப்பெரியோன், அமைச்சர் பதவிக்கென்றே தம்மை அர்ப்பணித்து விட்ட, சமயோசிதம் தர்மம் என்ற பக்குவம் மிக உணர்ந்த பக்தவத்சலனர் கூற; நானிருப்பது அங்கு; நாயகராக வேறு ஒருவர் வருவதுதான், நல்லதோ, நாடாளும் நண்பரே! கூறும் என்று மனம் குமுறிக் கேட்கின்ருர் மாணிக்கவேலர்! ஓ! ஓ! இவர் என்ன வடாற்காட்டில், 'பட்டாமணியமா' பொய்! பொய்! கூட்டுறவுத் துறை மூலம் நானே அங்கு காட்டிடுவேன் என் வலிவை! என்னிடம்தான் வடாற்காடு இருந்திடவேண்டும் என்று, இயம்புகிருர், மற்ருேர் பக்தவத்சலனர்.

எவர் என்ன கேட்டாலும், இதுகேளும், என் தலைவா! இராமன் உள்ள இடம் அயோத்தியாம் என்பார்கள்; அரிசனங்கள் உள்ள இடம், அடியேனுக்கு அரசு அன்ருே! அங்கு ஆகும் முறை அனைத்தையும் நான் கூற, அருள் கூர்ந்து உரிமைதனைத் தந்திடுவீர் இன்றே!—என்று கனம் கக்கன் கேட்கின்ருர்; காமராஜர் கலங்க.

தென் ஆற்காடதனில், திக்குக்கொரு தலைவர்—நானில்லாவிட்டால், சிதம்பரம், நமக்கேது, கழகம்தான்!—என்று பேசிப் பதவி கேட்கும் பெரியார் சாமிக்கண்ணு.

நேற்று இவர் வந்தார், நெருக்கடியில் நான் இருந்தேன்—சோற்றுப்பானைக்குள்ளே ஏதேதோ வந்துவிழும்! நானன்ருே எந்நாளும், உங்கள் பக்கம் என்று சொந்தம் கொண்டாடி நிற்கும், சீனுவாசர் மற்ருேர் பக்கம்.

ஊர் கூட்டிப் பயன் என்ன? சேரிகள் சேர்ந்தாலன்றித், தேர்தலில் வெற்றி எது? சேரிகளிலே, யார் உள்ளார், என்னைப் பின்பற்ருதார்! எங்கோ நெடுந்தொலைவில் எனை அனுப்பி வைத்துவிட்டு, இங்கு எவரெவரோ குதியாட்டம் போடுவதா? இம்முறை என் இன மக்கள், இதை ஒப்பார்—அறிந்திடுமின்! அமைச்சர் ஆகத்தக்க அருகதை எனக்கு என்று, அறிவித்தாலன்றித், தேர்தல்ஆபத்தாய்முடியுமென்று இடிமுழக்கம் எழுப்புகின்ருர், இளைய பெருமாள்.

இவரைச் சாய்த்திடவல்ல வலிவு எனக்குண்டு! கடைக்கண்ணைக் காட்டி எனைக் கைதூக்கி விடுவீரேல், காற்றுப் பறந்துவிடும், கக்கனுக்கு எழும் எதிர்ப்பு, என்று பேசுகிருர், சிவசுப்பிரமணியப் பெயரார்.

இந்நிலையில், இருப்பதுதான் என்ருகிவிட்டால், என்னைத் தலைமையாகக்கொண்ட இனம், சுதந்திரம் ஆகிப்போகும்! எனவே எனக்கென்ன? அதனைக்கூறும்—இதுபோல் வேறு இடத்திலிருந்தும் வந்தவண்ணம் இருக்கிறது பேரம்—என்று வெங்கடகிருஷ்ண ரெட்டியார் பேசுகிருர் பிறிதோர் பக்கம்.

இது அல்ல பிரச்சினை — நானே தமிழ்நாட்டுக் காங்கிரசுக்குத் தலைவன்! நாடோ, நாடார்! நாடார்! என்று நாடுவது, அவரையன்றோ. காமராஜருக்குக் கட்டியங்கூறத்தானா, நான் உள்ளேன், செச்சே! இஃது நான் ஒப்பமுடியாத பிச்சைப் பிழைப்பு ஆகும். நாடாளத் தக்கவர்கள், பட்டியலை நான் தருவேன்! அவரே தேர்த லில் ஈடுபடவேண்டும், அதனை நாடாளும் காமராஜர் நன்றாய் அறிந்திடவேண்டும். ஏறுமாறாக இவர் நடந் திடத் துணிவாரேல், எனக்கா இவருக்கா, நேருவிடம் செல்வாக்கு என்பதனைப் பார்த்தேவிடுகின்றேன், பயம் என்ன? என்று பக்கம் நிற்போரிடம் பக்குவமும் மறந்து அழகேசனார் பேசி அகலக் கடைகின்றாராம்.

இத்தனையும், புல் தரையில் படுத்துறங்கும் பாம்பு போல!

படமெடுத்து ஆடுவதும், தீண்டித் தீர்த்துக்கட்டு வதும் அடுத்த படலம் என்று அறிந்தோர் உரைக் கின்றார்.

ஆகவே தம்பி! அங்கொன்றும் வாழவில்லை—அஞ் சாது பணியாற்று!

பதவிக்காக அவர்கள், பண்பு காத்திட நாம்!

மந்திரிகளாகிவிட மார் உடையப் பாடுபடும், மகானுபாவர், அவர்! மரபு காத்திடும் மாவீரர் வரிசை யிலே உள்ளோம், நாம்.

இலட்சங்கள் எம்மிடத்தில் என்கின்றார், அவர்!

இலட்சியமே எமக்குள்ள அணிகலனும், படைக் கலனும் என்கிறோம் நாம்!

அமைச்சுக் கேட்போர் அவர்; அரசு கேட்போர், நாம்!

நமை அவர்கள் பழிக்கின்றார்; நாடோ நம்மிடம் பரிவு காட்டுகிறது!

சந்தி சிரித்தது என்றார் அமைச்சர்! நெஞ்சில் இதனைக்கொள்—அந்தப்பழி துடைத்திடப், பகை அழித் திட, ஏறுநடையுடையோனே! எங்கே காட்டு, உன் திறம்!!

வீடெல்லாம் அறிந்திடச் செய், இவர்தம் ஆட்சி யால் வந்திட்ட கேடெல்லாம்!

மாடாய் உழைத்து ஓடாய்ப்போனார், மக்கள் என் பதை, மனைதொறும் மனைதொறும் எடுத்துரைத்திடு!

சிங்களச் சீமையிலே செத்திடும் தமிழர் பற்றிச் சிறு விரலும் அசைக்காத செருக்குக் காணீர் என்று கூறு!

வடக்குக்கு அடிமைப்பட்டு, வாழ்விழந்த தமிழர் களை மேலும் வாட்டிவதைத்திடும் வஞ்சகத்தை விளக்கு நன்றாய்!


சந்தி சிரித்தது, என்றார் அமைச்சர்! தம்பி! உன் பணியால் வீடுதோறும் உள்ளவர்கள், வீழ்த்திடுவோம், வீணராட்சி என்று வீறுகொண்டு எழுந்திடக் காணல் வேண்டும்.

அறம் போன்ற கூர்வாளை, அவனி அறிந்ததில்லை. அஃது நம் கரத்தில்—அச்சம் ஏன், இனி நமக்கு.

சிரித்தாராம்! சிரிக்கட்டும்! இரத்தம் இன்று சிந்திடு வோர் நாம்—ஓர் நாள் வெற்றிப் புன்னகை புரிந்திடு வோம், திருவிடத்தை விடுவிப்போம்.

அது வரையில், செருக்கு மிக்கோர், சிரிக்கட்டும்; வெட்கமே வேலாகி நம் விலாவைக் குத்தட்டும்; வெற்றி எட்டுத் திக்கும் என்று முரசு கொட்டிய இனம், வீறு கொண்டெழுந்து, விடுதலை காணட்டும்; திராவிடம் மலரட்டும். அப்போதுநாம், இன்றைய மாற்றார்களைக் கண்டு கூட, ஏளனச் சிரிப்புச் சிரித்திடமாட்டோம். இன்பத் திராவிடத்தில், பூவையாள் ஈன்றெடுத்த பொற் கொடி, பூங்காவில் துள்ளி விளையாடி, மல்லிகைக் கொடியைத் தூக்கி மாதாவின்மீது வீசும், பாம்போ என்று அன்னை மருளக் கண்டு, கைகொட்டிச் சிரித் திடும்—காண்போம்.

அண்ணன்,




## பர்மிட் வேண்டுமா?

ஒரு தீவிர காங்கிரஸ்வாதி, தமதூர்க் கனவான் ஒருவரிடம் நிதி வசூலுக்காகச் சென்று உரையாடிக்கொண்டிருக்கிறார். உரை யாடலை இடையிலே நிறுத்தி,

"சரி, கட்டாயம் உங்களுக்கு ஓர் பர் மிட் வாங்கித் தந்துவிடுகிறேன். ஆனால், அதற்கு முன்னால், எங்கள் கட்சி நிதிக்கு நீங்கள் எவ்வளவு தரத் தயார் என் பதைச் சொல்லுங்கள்"

என்று கேட்கிறார். இப்படியொரு செய்தி யைச் "சுதேசமித்திரன்" இதழ் "விசித்திர உலகம்" என்ற தலைப்பில் 14—3—61-ல் வெளியிட்டிருக்கிறது.



# வேதனை

அழுத்துக் களைத்துப்போய் உணவு விடுதிக்குள் நுழைந்தார் சோலையப்பர். நேரே கல்லா மேசையருகிற் போய்ச் சட்டைப் பையிலிருந்து பதினேழு ரூபாய்களை எடுத்து வைத்தார். மாதம் ஒரு முறை இரண்டாம் தேதியோ மூன்ரும் தேதியோ, இப்படி மொத்தமாகப் பணத்தை உணவு விடுதிக்காரரிடம் கொடுப்பதும், விடுதிக்காரர் அவரிடம் 30 சாப்பாட்டுச் சீட்டுகள் அடங்கிய புத்தகம் ஒன்றை நீட்டுவதும் வாடிக்கை.

"இரண்டு ரூபாய் குறைகிறதே'' என்று உணவு விடுதிக்காரர் தாள்களைச் சோலையப்பரின் பக்கமாகத் தள்ளி வைத்தார்.

"இல்லையே சரியாகத்தானே எண்ணி வைத்தேன்'' திரும்பவும் ஒரு முறை தாள்களை எடுத்து எண்ணிப் பார்த்தார் சோலையப்பர்.

"பதினேழு ரூபாய் சரியாக இருக்கின்றதே!''

"எதற்கு?''

உணவு விடுதிக்காரர் பூடகமாகக் கேட்டார்.

"சாப்பாட்டுச் சீட்டுப் புத்தகம் ஒன்று கொடுப்பதற்குத்தான்''

விடுதிக்காரர் வாய் திறக்கவில்லை. அவர் கை, எதிரில் சுவர்மீது தொங்கிக்கொண்டிருந்த விலை விவரப் பலகையைக் காட்டிற்று. சோலையப்பர் அதை உற்று நோக்கினர்.

அந்தப் பட்டியலின் ஒவ்வொரு வரியும் ஒவ்வொரு சம்மட்டியாக மாறிச் சோலையப்பரின் தலைமீது ஓங்கி ஓங்கித் தாக்கவில்லை. அதை விடக் கொடுமையான, கடுமையான, தாங்கமுடியாத, விவரிக்க முடியாத வேறு எதையோ செய்தது.

அந்த உணவு விடுதியில் விற்பனை செய்யப் பெறும் ஒவ்வொரு பண்டத்தின் புதிய விலையும் அங்கே காணக் கிடைத்தது. பத்துக் காசுகளாக இருந்தனவெல்லாம் பதின்மூன்று காசுகளாக ஏற்றம் பெற்றிருந்தன. பதின்மூன்று காசுகளாக இருந்தவை எல்லாம் பதினைந்து, பதினறு என்று பெருக்கெடுத்திருந்தன. ஒவ்வொரு பண்டத்தின் விலையும் மாறுதல் பெற்று மயக்கத்தையும், அதிர்ச்சியையும் ஏற்றிக்கொண்டிருந்தது. அந்தப் பட்டியலில் காணப்பட்ட அவ்வளவையும் படித்துப் பார்ப்பதற்கான தென்போ,

* கனவு *

துணிச்சலோ சோலையப்பரிடம் இல்லை. ஏற்கெனவே மாதந் தவருமல் திடீர் திடீர் என்று தோன்றித் தோன்றித் தம்மைப் பெருவாதைக்குள் தள்ளிக்கொண்டிருக்கும் பொருளாதாரச் சிக்கலிலிருந்து மீள முடியாமல் துன்பம் உழந்து, துயருழந்து நைந்துபோன உள்ளத்தை உடையவர் சோலையப்பர்.

அந்த விளம்பரப் பலகையின் முதலிரண்டு வரிகளைப் படித்துவிட்டு எல்லாவற்றிற்கும்கீழே உள்ளகடைசி வரியை நோக்கினர் அவர். அவருக்கு அந்தக் கணத்தில் தேவையாகவோ, பிரச்சினையாகவோ முன்நின்றதும் அந்தக் கடைசி வரிதான்.

'சாப்பாட்டுச் சீட்டுகள் 30-கொண்ட புத்தகம் ஒன்றின் விலை ரூ. 19—00'

அந்தக் கடைசி வரியை அவர் படித்தாரோ இல்லையோ, அப்படியே அவர் கீழே சாய்ந்துவிட்டார். நல்லவேளை, அவர்சாய்ந்தது ஒரு நாற்காலியைப் பார்த்து. அதனால்'அவர் உட்கார்ந்துகொள்கிருர்' என்று எண்ணிக்கொள்ள முடிந்தது எதிரிலிருந்த விடுதிச் சொந்தக்காரரால்.

தாலுகா அலுவலகத்தில் சாதாரண எழுத்தராகவே தம் காலத்தை எல்லாம் ஓட்டிவிட்டவர் சோலையப்பர். மாற்றல், மாற்றல் என்று எங்கெங்கோ அனுப்பப்பட்டு, அலைந்துவிட்டுக் கடைசியாக இங்கேவந்து குந்தியுள்ளவர்.

அவரைப் பொறுத்தமட்டில்காலம் ஒரு கலகலத்த ஓட்டைப்படகு. அந்த ஓட்டைப்படகை இயக்கி வைக்க—தள்ளிச் செல்ல அவர்தம் இரு கரங்கள் மட்டும் போதவில்லை. அவர்தம் உயிரும் போதவில்லை; உணர்வும் போதவில்லை; உடல் முற்றும் கூடப் போதவில்லை.

அந்தப் போதாமை அவரைத் திக்குமுக்காடவிட்டுத், திணற வைத்தவண்ணமே இந்நாள்வரை இழுபட்டுக்கொண்டு வந்துள்ளது.

அவர் உழைத்துவந்த உழைப்பின் விளைவு, அந்த அலுவலகத்தில் அவ்வளவு காலமும் அவர்பால் வேலை மாற்றத்தையோ அல்லது ஏற்றத்தையோ நல்கவில்லை. என்ருலும், ஓரளவு வருவாயை — சம்பளத்தை ஏற்றிக்கொடுத்துள்ளது; —வயதும், உழைக்கின்ற காலமும் வளர்ந்துகொண்டு போகின்ற அளவினைத் — தன்மையைத் தடுத்து நிறுத்திவிட யாராலும் முடியாத முன்னிலையால்.

சோலையப்பர் பெரிய குடும்பத்துக்குத் தலைவர். ஆரம்பகாலத்தில் மாதம் இருபது ரூபாய் சம்பளம் வாங்கிக்கொண்டு பணியாற்றத் தொடங்கிய வேளையில், அவர்போது

மிடத்திற்கெல்லாம் அவர் பின்னேடு சென்று, அவருக்குச் சமைத்துப் போட்ட பாட்டியம்மா முதல் பெரிய வர்கள் எல்லாரும் இன்று இருக் கிருர்கள். அதன்பிறகு, அவராக இழுத்துப்போட்டுக்கொண்ட குடும் பத்தொல்லேயின் விளைவாக ஏற்பட்ட ஒருடசன் உயிர்களில் இரண்டு மூன்று கழிவுபோக, மற்றவர்கள் அத்தனைபேரும் அப்படியே இருக் கிருர்கள். எல்லாவற்றிற்கும், எல்லா ருக்கும் தலேவராக இருக்கிருர் இவர்.

இருந்தும் இவர் உண்டி விடுதி யில்தான் சாப்பிடவேண்டும் என்ற நிலே கடந்த பத்து ஆண்டுகளாக.

அவர் பணியாற்றும் அலுவலகம் இருக்கும் இந்தப் பெரிய நகரத்தில், அவர் குடும்பம் முழுதும் வாழ்வ தற்கு ஏற்ற பெரிய வீடு, வசதியான வீடு எளிய வாடகையிற் கிடைக் குமா என்ன?

இங்கு அவர் குடியிருக்க வேண்டு மானல், அவர் வாங்கும் சம்பளம் ரூபாய் நூற்று முப்பதையும் வாட கைக்குக் கொடுக்கத்தானே சரி யாக இருக்கும்!

எனவே, சொந்த வீடு இல்லாவிட் டாலும், குறைந்த வாடகையில் வீடு கிடைக்கக்கூடிய சொந்த ஊரில் குடும்பத்தை எல்லாம் விட்டுவிட்டு இங்கே அவர் தனி வாழ்வு வாழ வேண்டி இருக்கிறது.

எப்படிப் பார்த்தாலும் அவருக்கு மட்டுமே மாதம் ஒன்றுக்கு ரூ. 40/-க் குக் குறையாமல் வேண்டும். 'நாள் ஒன்றுக்கு ஒரே காபி, ஒரே ஒரு சாப் பாடு, இரவில் எளிய சிற்றுண்டி, துணிகளேத் தாமே சொந்தத்தில் தோய்த்துக்கொள்வது, இந்தப்பெரு நகருக்குள் எங்கு போகவேண்டு மானுலும் நடந்தே போவது'-என்ற திட்டத்தின்படி.

'ஆமாம், ஏன் இருந்திருந்தாற் போல் இப்படி இரண்டு ரூபாயை ஏற்றிவிட்டார்கள் சாப்பாட்டிற்கு?'

சோலேயப்பர் தமக்குள் கேட்டுக் கொண்டார்.

அதற்குப் பதில் சொல்வதுபோல் உணவு விடுதி முதலாளியே பேசி ஞர் வேருெரு ஆளிடம்.

"இன்று முதல் எல்லாப் பொருள் களுக்கும் விலேயை மாற்றிவிட் டோம்—அதாவது, ஏற்றிவிட்டோம். அதற்கு நாங்கள் காரணம் இல்லே; பொறுப்பில்லே. புதிதாக ஏறியுள்ள வரிகள் காரணம். சாம்பாரர்ப் பொருள்களுக்கெல்லாம் வரியை அதிகமாக ஏற்றிவிட்டார்கள். காபிக் கும், மண் எண்ணெய்க்கும் வரி யேறிப் போய்விட்டது. மண் எண் ணெய்க்கு ஏறிய வரி, கத்தரிக்காயை மறைமுகமாகத் தாக்குகிறது. எல்லாவற்றிற்கும் விலே இரட்டிப்பு, இரட்டிப்பு ஆகிவிட்டது. நாங்கள் தான் என்ன செய்வோம்!"

சோலேயப்பர் எழுந்தார். பேச வில்லே. மேசைமீது அவர் வைத்த பதினேழு ரூபாயையும் எடுத்துக் கொண்டார்.

"பரவாயில்லே. இப்போது சீட்டு வாங்கிக்கொள்ளுங்கள். பாக்கியை மாலேயில் கொண்டுவந்து கொடுங் கள்."—உணவு விடுதிக்காரர் சொன் ஞர்.

"இல்லே, மாலேயிலே வந்து வாங் கிக் கொள்கிறேன்"

சோலேயப்பர் நடந்தார்.

"சாப்பிட வில்லேயா?"

உணவு விடுதிக் காரரின் அந்தக் கேள்விக்குச் சோலேயப்பரால் மறு மொழி சொல்ல முடியவில்லே. வயிற் றைப் பற்றி எரிய வைக்கும் விலே யேற்றம் கடும்பசியைக் கூட மறக்க டித்து விட்டது போலும்!

அந்தக் கடும்பசி வேளேயில் புதுத் திட்டம் போட்டுக் கொண்டு நடந் தார், சோலேயப்பர்

'இது வரை நாள் ஒன்றுக்கு ஒரு வேளே சாப்பிட்டு வந்ததை இன் ருேடு நிறுத்திக் கொண்டு விட வேண்டும். இனி மாதம் 15 நாட்கள் சாப்பாடு. 15 நாட்கள் வெறும் சிற் றுண்டி.'

'ஆமாம், இந்த வரி எல்லாம் போடு வது யார்? அரசு தானே. அரசு என்ருல், அமைச்சர்கள்.

அன்ருெருநாள் யாரோ முதல் அமைச்சராம், உயர்ந்த மேடையில் ஏறி நின்று ஆடம்பரமாக, அமர்க்க ளமாக மூன்றரைக் கட்டைச் சுருதி யில் சத்தம் போட்டுப் பேசினுரே, 'நாங்கள் ஏழைகளுக்குச் சோறு போட நினேக்கிருேம். எங்களே எதிர்ப்பவர்கள் அதைத் தடுக்கிருர் கள்' என்று.

இப்படி வரி போட்டுச் சாப்பாட் டின் விலேயை ஏற்றுவது தான் சோறு போடும் இலட்சணமா?— ஐயயோ, இவர்கள் சோறு போட வேண்டாம். உள்ளதைப் பறிக்கா மல் இருந்தால் போதுமே!

சோலேயப்பர் அளவு மீறிய பசி யோடு அங்கலாய்த்துக் கொண்டு போனுர்.

போகும் வழியில் உரத்த குரலில் ஒருவர் செய்தித் தாள் படித்துக் கொண்டிருந்தார்.

"இந்த ஆண்டு ஒரு வரி கூட நாங்கள் போடவில்லே.—அமைச்சர் பெருமிதம்"

"அட, பாவி! வரி போடவில் லேயா!" சோலேயப்பர் வினவவில்லே. அங்கே நின்ற வேருெருவர் கேட் டார்.

'வரி போட்டது டெல்லி அரசு. இவர்கள் அங்குள்ளோர் சொல்வ தைச் செய்பவர்கள் தாமே!"

"அப்போ, இவர்களுக்கு அமைச் சர்கள் என்ற பெயர் ஏன்? ஆடம் பரம் ஏன்? ஆரவாரம் ஏன்?"

✽

## விற்பனையாளர்கள் கவனத்திற்கு

"திராவிட நாடு", "HOME LAND" இரண்டு இதழ் களுக்கும் ஒருவரே விற்பனையாளர்களாக இருப்பவர்கள், பட்டியல் பாக்கி அனுப்பும்போது, இனிமேல், அன்புகூர்ந்து **தனித் தனியாக** அனுப்பும்படி கேட்டுக் கொள்ளு கிருேம்.

பொறுப்பாளர்.

2-ம் பக்கத் தொடர்ச்சி

அறிவை இழக்கவில்லை. "அப்பா மணி, இனி நீ இந்தச் சட்டையோடு இருக்கக்கூடாது. நாலுபேர் என்ன சொல்லுவாங்க! பாரப்பா அவனுக்கு வந்த பவிசை என்று ஏளனம் செய்வார்கள். சாதாரணமாக ஒரு வேட்டியைக் கட்டிக்கொள். ஒரு சட்டை போட்டுக்கொள். நல்ல நிழல் தரும் மரங்களெல்லாம் நம்ம கழனியிலே இருக்கு. அங்கே வந்து நிம்மதியாகப் படுத்துக்கொள். என்னசெய்யவேணுமானாலும்செய்; போப்பா! போய் முதலிலேசாப்பிடு"

என்று பல கூறினர் மணியின் தந்தை.

"ஏனப்பா! சட்டை என்ன மற்றவங்க தைச்சுத் தந்ததா; நீங்க தானே பணம் தந்தீங்க. சரி, உங்க விருப்பத்துக்கு மாறாக நான் எதையும் செய்யத் தயாராயில்லை. நீங்களும் வாங்க சாப்பிடலாம்" என்றவாறு சாப்பிட்டு முடித்தான் மணி.

இரண்டு நாட்கள் கழிந்தன. தன் அப்பா கூறிய உடையை அணிந்து கழனிக்குச் சென்றான் மணி. விடுமுறைக் காலங்களிலெல்லாம் அப்பாவுக்கு ஓய்வு கொடுத்துவிட்டு வயல் வேலை முழுவதும் இவன்தான் பார்ப்பான். அதனால்தான் அவன் உடல் நன்கு வலிமை பெற்று விளங்கியது. உருண்டு திரண்ட கை கால்கள். எவரும் கண்டு மயங்கும் அழகு வாலிபன் மணி.

அன்று அவன் தந்தை சந்தைக்குப் போயிருந்தார். அவன்தான் கழனியில்! காளைகளுடன் காளையாய் வேலை செய்த களை உச்சிப் பொழுதாகையால் அக்காளைகளுக்கு ஓய்வு கொடுத்துவிட்டு, வாழையின் அடியில் சிறிய கட்டில் ஒன்றில் மெல்லப் படுத்தான் அக்காளை. அயர்வினால் தன் உடலெல்லாம் வியர்வை கொட்ட அப்படியே கண்ணயர்ந்தான்.

சிறிது நேரம் சென்றது. யாரோ அவன் பின்னின்றபடி ஒரு முல்லைப் பூவை அவன்மீது போட்டது போன்று இருந்தது. கண் விழித்துப் பார்த்தான். கன்னியொருவள் மீண்டும் எறிவதற்காக மற்றோர் முல்லைப் பூவைப் பறிப்பதைக் கண்டான். பறித்துக்கொண்டு மீண்டும் போடுவதற்குத் திரும்பிய அக்கன்னி வெட்கம் தன் தலையைக் கவிழ்க்கக் குனிந்தாள்.

"இங்கே வா" என்று மெதுவாகக் குரல் அவிழ்த்தான் மணி. நெருங்கி வந்த உருவம் செல்லி என்று கண்டு திடுக்கிட்டான்.

"ஏன் அப்படிப் பார்க்கிறீர்கள்! என்னை உங்களுக்குப் பிடிக்கவில்லையா?" என்று குளிர் நிலவு போன்ற முகத்தில் குவளை இதழைப் பிரித்து முத்துப் பற்கள் சில தெரியப் புன்னகையோடு கேட்டாள் செல்லி.

"இல்லை......"என்று இழுத்தான் மணி.

"எனக்குத் தெரியும் நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று. நான் காம் வகுப்புப் படித்த நானே துணிந்து வந்திருக்கின்றேன்; இவ்வளவு படித்துவிட்டு நீங்கள்..."என்றாள் செல்லி.

"நான் அஞ்சவில்லை. உன் தாய்க்கும் சுற்றத்தார்க்கும் சமுகத்திற்கும் தான் அஞ்சுகிறேன்"

"அதற்கெல்லாம் நீங்கள் ஏன் பயப்படவேண்டும்"

"அதுமட்டுமல்ல. நீயோ பணக்காரப் பெண். நானோ ஏழை. அதிலும் தாழ்த்தப்பட்டவன். என்னை...?

"நீங்கள் விரும்புவீர்களா என்னை? நல்ல படித்த பெண், பட்டணத்துப் பெண், நாகரிகமானவள்..."

"இல்லை! இல்லை! என்னை முறியடிக்க எவ்வளவு சாமர்த்தியமாகப் பேசுகிறாய்!"

"பின் என்ன! பணக்காரியாய் இருந்தால்மட்டும் கொடுமைக்காரியாய் இருக்கமுடியுமா?"

"செல்லி..."

"அன்பா..."

"செல்லி! இன்று என் தந்தை வர நேரம் ஆகும். இன்று மாலை உன்னால் இங்கு வரமுடியுமா?"

"ஓ! தாராளமாக வர்ரேன். நான் போய் வருகிறேன். வரச்சொல்லிவிட்டு நீங்கள் சென்றுவிடக் கூடாது'—அடுத்தகணம் மறைந்தாள்.

மாலையும் வந்தது. மங்கையின் வரவைநோக்கி அங்கும் இங்கும் திரிந்தான்.

"ஆ! வந்துவிட்டாயா செல்லி!"

"வந்துவிட்டது தெரியவில்லையோ! இங்கே வாருங்கள்"

"முடியாது. இங்கே வா செல்லி"

"நீங்கள்தான் வரவேண்டும்"

"முடியாது நீதான் வரவேண்டும்"

என்று போட்டியிட்டுக்கொண்டே இருவரும் நெருங்கினர். கையைப் பற்றினான் மணி. அப்படியே இருவரும் அமர்ந்தனர். கிணற்றங்கரையாதலால் இவர்கள் உருவம் கீழேயுள்ள தண்ணீரில் பிரதிபலித்தது. இரண்டுபட்ட நெஞ்சங்கள் செம்புலப் பெயல் நீர் போல ஒன்றிவிட்டன. இனி யாராலும் பிரிக்க இயலாது.

"அன்பா! மீண்டும் உங்களுக்கு எப்போது படிப்புத்தொடங்கும்" என்று குரல் தெளிவில்லாது கேட்டாள் செல்லி.

"இன்னும் மூன்று மாதங்கள்"

"அப்ப! மூன்று மாதம்..."

மாலை மயங்கி மெதுவாக இருள் சூழ ஆரம்பித்தது. ஒருவரோடொருவர் கை பிணைத்து வாழையின் அருகே சென்றனர்.

இன்பமயமாக நாட்கள் பல கழிந்தன.

ஒரு நாள்......!

செல்லி மணியைப்பார்க்க அவன் வீட்டிற்கே வந்துவிட்டாள். அவள் வருகை வேலப்பனுக்கு அதிர்ச்சியைத்தான் கொடுத்தது.

"வாம்மா! உங்க அம்மா அனுப்பினாங்களா?" என்று ஒருவாறு மனம் தேறிக் கேட்டார் பெரியவர்.

"அதெல்லாம் ஒன்றுமில்லே! சும்மாதான் வந்தேன். உங்க மணி எங்கே" என்று கேட்டுவிட்டாள் செல்லி. புரிந்துகொண்ட வேலப்பனின் மனதில் புயல் வீச ஆரம்பித்தது. தன் மகன் தகுதியற்ற செயலொன்று செய்வதைத் தாங்கமுடியாத நிலையில் தடுமாறினார்.

"அப்பா" என்று அழைத்தவன், செல்லி இருப்பதைக்கண்டு "வா! செல்லி! ஏது இவ்வளவு தூரம்" என்று தெரியாதவன் போல் கேட்டான்.

அவன் தந்தையிருந்தும் பெயரை விட்டுக் கூப்பிடவே துணிந்துவிட்டாள்.

"மணி இங்கே வா; நீங்களும் தான்" என்று அவர்கள் வீட்டிற்குள் மடமடவென்று நுழைந்தாள்.

பெரியவரின் குழப்பம் அதிகரித்தது.

"பெரியவீட்டுப் பெண். வயதுவந்தது இப்படியெல்லாம் செய்கிறதே! மற்றவர்கள் பார்த்துவிட்டால், இவ்வூரில் குடியும் இருப்போமா" என்று பலவாறு சிந்தித்துக்கொண்டே உள்ளே நுழைந்தார்.

நுழைந்ததும் நுழையாததுமாக அப் பெரியவரிடம் ஒரு பெரிய பண முடிப்பைக் கொடுத்தாள். பெரியவருக்குத் தலை சுற்றியது.

(16-ம் பக்கம் பார்க்க)

# இலங்கைத் தமிழர் அவதி

"தமிழன் என்றொரு இனமுண்டு
தனியே அவர்க்கொரு மொழியுண்டு"

என்று பெருமையுடன் கூறிக்கொள்கிறது தமிழ் இனம்.

ஆனால், இலங்கைவாழ் தமிழ் மக்கள் இன, மொழி உரிமைகள் மறுக்கப்பட்டு, இன்னல் பலவற்றுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அறியாதவரிலர்.

நாம் எந்த இனத்தையோ, மொழியையோ, வெறுக்கவில்லை. பகைவர்களாகக் கருதவில்லை. பிறந்த நாட்டு உரிமைக்காக, சொந்த மொழிக்காக, தமிழர் என்ற இனத்துக்காக, சுய கௌரவத்துக்காகப் போராடுகிறோம். எமது நியாயமான கோரிக்கைகள் எவைகளையுமே சிங்கள அரசாங்கம் சிந்திப்பதாகவோ, இன்றேல் செவிமடுப்பதாகவோ இல்லை. தமிழரும் இந்நாட்டு மக்கள் என்று எண்ணிப்பார்ப்பதாகத் தெரியவில்லை. இந்நிலையில், எமது இனத்தின் ஏற்றுத்துக்காக, இழந்துபோன உரிமைகளுக்காக அறப்போர் அகிம்சை நெறியில் ஆரம்பித்துள்ளோம். இது நியாயமற்றது என எவருமே ஒதுக்கிவிடமுடியாது. பெரும்பான்மையான இனம் தனது பெருவாரியான பிரதிநிதிகளின் எண்ணிக்கையைக்கொண்டு, சிறுபான்மையினரை அடக்கி ஒடுக்கி ஆளமுடியாது என்பது சரித்திரம் காட்டும் ஆதார பூர்வமான உண்மையாகும். எங்கள் உடைமைகளை மறந்து, எங்கள் வசதிகளைக் குறைத்து, ஏன்? எங்களையே தியாகத் தீயில் அர்ப்பணித்து, எமது உரிமைக் குரலை எழுப்பினால், அரசாங்கம் தனது பொலீஸ் குண்டாந்தடிகளாலும், இராணுவ ஈட்டிகளினாலுமா பதில் சொல்லவேண்டும்? இந்த அநியாயமான போக்கைக் கண்டிக்க மனிதாபிமானமுள்ள எவருக்குமே உரிமையுண்டு. எனவேதான், எங்கள் தமிழ் அன்பர்களிடம் எங்களுக்கு வேண்டிய உதவியை நாடுகின்றோம். உங்கள் நல்லெண்ணத்தை, ஆதரவை, ஆசியைக் கோருகின்றோம்.

தமிழ்த்தாயின் புதல்வர்கள், அவர்கள் எங்கிருந்தாலும், உள்ளத்தால் உணர்வால், பண்பாட்டால் ஒன்றுபட்டவர்கள். எந்த ஒரு தமிழ் மகனுக்கும், உலகின் எந்த ஒரு பகுதியிலும் தீங்கு இழைக்கப்படுமெனின், அதை ஒரே குரலில் கண்டிக்கவேண்டுவது, தமிழ் பேசும் மக்களின் தலையாய கடமையாகும். பெருமைமிக்க தமிழ்இன மக்கள், ஒவ்வொருவர் நலனிலும், ஒவ்வொருவரும் ஆர்வமுடையவர்கள் என்பதை உலகறியச் செய்தல் வேண்டும்.

ஈழத்துத்தமிழர், இந்தியத்தமிழர், பர்மாத்தமிழர், பம்பாய்த் தமிழர் போன்ற பாகுபாடின்றி, "எல்லாரும் தமிழர் என்ற மனப்பண்புடையவர் நாம்" என்பதைப் பாரறியச் செய்யுமாறு பைந்தமிழ்ச் செல்வர்களை வேண்டுகிறோம்.

இன்று இலங்கையில் நடக்கும் அதிகார வர்க்கத்தின் அடக்குமுறையை, அவர்கள் எம்மீது உபயோகிக்கும் ஆக்ரமிப்பை எதிர்த்துக் குரல் எழுப்புமாறு வேண்டுகிறோம்.

சென்ற சில தினங்களுக்கு முன் இலண்டனிலுள்ள தமிழர்கள், இலங்கையில் நடைபெற்ற பொலீஸ் அட்டூழியத்தை முன்னிட்டு ஆட்சேபனை தெரிவித்தார்கள். இதுபோன்றே உலகின் ஏனைய பகுதிகளிலுமுள்ள தமிழ்ச் சகோதரர்கள் தமது ஏகோபித்த ஆட்சேபனையைத் தெரிவிக்க வேண்டுகிறோம்.

தமிழ்நாட்டிலிருக்கும் இலங்கை தூதவராலயத்தின் முன்பும், டெல்லியிலும், ஏனைய பகுதிகளிலும் தங்கள் கண்டனக் குரலை எழுப்பி, எங்களுக்கு ஆக்கமும், ஊக்கமும், ஆதரவும், ஆசியும் அளிக்கும்படி தமிழன்பர்களை வேண்டுகிறோம்.

வாழ்க தமிழினம்!
வளர்க தமிழ்மொழி!!

**தமிழ் இளைஞர் மன்றம்,**
**கொழும்பு.**

*

குறிப்பு:- இலங்கையிலுள்ள தமிழ் இளைஞர் மன்றம் வெளியிட்டுள்ள வேண்டுகோளறிக்கையில் குறிப்பிட்டிருக்கும், குறைபாடுகளனைத்தையும் களைவதில் உற்சாகத்தைக் காட்டி, ஒத்துழைப்பை நல்கி, ஈழத்தரசின் இந்தத் தகாத போக்கினையும், நோக்கினையும் மாற்றி, இனிமேலும் இப்படியொரு கொடுமை சனநாயகம் பேசப்படும் நாடுகளில் நடைபெறாதபடி தடுக்க, மனிதப்பண்பு படைத்த அனைவரும் ஒன்று திரண்டு தக்க பரிகாரம் தேடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

ஈழத்தரசியாம் திருவாட்டி சிரிமாவோ அவர்கள் இலண்டனிலிருந்து ஈழம் திரும்பியதும், அங்கு நடைபெறும் கொடுமைகள் அகற்றப்படுமென்று எதிர்பார்க்கிறோம்.

(ஆ—ர்)

•

இலங்கைத் தமிழர்கள், சிங்கள இனமொழி வெறியை எதிர்த்துத் தம் மொழி காக்க நடத்திவரும் அறப்போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் பொருட்டு தி. மு. க தலைமை நிலையத்தின் சார்பில் 13—3—61 மாலை 6 மணிக்கு, தலைமை நிலையச் செயலாளர் கே. ஏ. மதியழகன் பி. ஏ. அவர்கள்

பதிவு எண். எம். 4642

தொலைபேசி எண்.... } அலுவலகம் 15
இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

தலைமையில், திருவல்லிக்கேணிக் கடற்கரையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில், கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. இலங்கைத் தமிழர்கள் நியாயம் நிறைந்த தங்களது உரிமைகளுக்காக நடத்தும் வன்முறையற்ற அமைதியான அறப்போராட்டத்தை நசுக்க இலங்கை அரசு கையாளும் அக்கிரமமான–மனிதத் தன்மையில்லாத எதேச்சாதிகார வழி முறைகளைக் கைவிட வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் திரண்டுள்ள இந்த மாபெரும் தமிழர் பொதுக்கூட்டம், இலங்கை அரசின் அரசியல் நேர்மைக்கும் மனித உணர்வுக்கும் வேண்டுகோள் விடுக்கிறது.

2. இலங்கைத் தமிழர்கள் உயிர், உடைமை, உரிமை, எதிர்காலம் ஆகியவற்றைப் பாதிக்கும்—கொழுந்துவிட்டெரியும் இந்தப் பிரச்சினையில் இந்தியஅரசு காட்டும் கவலையற்றதன்மையைக் கண்டு இந்த மாபெரும் தமிழர் பொதுக்கூட்டம் பெரு வருத்தமும் திகைப்பும் கொள்கிறது.

3. இந்த மாபெரும் தமிழர் பொதுக்கூட்டம் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தமிழ் நாட்டு அரசின் கருணையற்ற போக்கை மிக வன்மையாகக் கண்டிக்கிறது. இலங்கைத் தமிழர் பிரச்சினையில் நியாயம் நிறைந்த நிலையான தீர்வு காண இந்திய அரசு ஈடுபடுமாறு செய்யத் தமிழ் நாட்டு அரசு தனது செல்வாக்கைப் பயன்படுத்தவேண்டுமென்று அழுத்தம் திருத்தமாக வற்புறுத்துகிறது.

4. நியாயம் நிறைந்த தங்கள் குறிக்கோள்களுக்காக, எத்தனையோ இன்னல்களையும், இழிவையும் ஏற்று அறப்போராட்டம் நடத்தும் இலங்கைத் தமிழர்களுக்கு இந்த மாபெரும் தமிழர் பொதுக்கூட்டம் தனது தார்மீக ஆதரவை உரிமையாக்குகிறது.

5. இந்த மாபெரும் தமிழர் பொதுக்கூட்டம், அமைதி, நீதி ஆகியவை நிலைநாட்டப்படவேண்டும் என்பதில் அக்கறை கொண்ட அனைவரையும், இலங்கையில் வளர்ந்துவிட்ட வேதனையும், திகைப்பும் தரும் நிலைமை குறித்துக் கவனிக்குமாறும், இலங்கை அரசை நல்வழிப்படுத்தத் தங்களது வாய்ப்புக்களைச் செயல்படுத்துமாறும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறது.

*

14-ம் பக்கத் தொடர்ச்சி

"இன்று என் தாய் உங்களை வட்டிப்பணம் கேட்க வருகிறார். அதற்காகத்தான் ஓடோடி வந்தேன்" என்றாள் மெதுவாக.

திகைத்துப்போன பெரியவர் அவள் பண்பட்ட உள்ளத்தைப் பலவகையாகப்பாராட்டினார். இத்தனைக்கும் காரணம் தன் மகனே என்பதையும் உணர்ந்தார். இருப்பினும் அவர் நெஞ்சம் ஏனோ இடம் கொடுக்கவில்லை.

"ஏம்மா! செல்லி, உன் தாய் வந்தால் நான்தானே பதில்சொல்லணும். இதற்காக உனக்கு ஏன் இவ்வளவு சிரமம்" என்று குறுநகை புரிந்தார் பெரியவர்.

"மணி! பார்த்தாயா உன் தகப்பனாரை? நான் செய்வது பிடிக்கவில்லையா?" என்று செல்லமாகக் கேட்டாள்.

"அப்படியெல்லாம் இல்லையம்மா! பார்க்கலாமென்றுதான் சொன்னேன்."

"என்னை மன்னித்துவிடுங்கள் மணி; உங்கள் தகப்பனாரைப் புண்படப் பேசிவிட்டேன்."

"செல்லி! அப்படியெல்லாம் சொல்லாதே."

"எவ்வளவு அன்பு, எவ்வளவு பண்பு, வெள்ளையுள்ளம் கொண்ட பெண். உயர்குடிப் பிறப்பென்றாலும் இப்படியல்லவா இருக்கவேண்டும். எவ்வளவு சாந்தமான குணம். இது போன்ற பெண் எனக்கு மருமகளாய்க் கிடைக்காதா?" என்று எண்ணியவாறு வீட்டை விட்டு வெளியே வந்தார் பெரியவர்.

*

காலம் ஓடியது.

நெற்பயிர் ஓங்கி வளர்ந்தது. பூரிப்புப் பெற்ற மணி, செல்லியின் புன்சிரிப்பையெல்லாம் நெற்பயிரின் கதிர்கள் சிந்தக்கண்டான்.

*

எத்துணை நாட்களுக்குத்தான் ஊர்க்கண்ணை மூடமுடியும்? எல்லாம் வெளியாகி விபரீதமாயின.

சீற்றம்கொண்ட சின்னம்மாள் பக்கத்து ஊரிற் சென்று, தன்குல மாப்பிள்ளையொருவனைத் தேடிவிட்டாள். அடுத்த நாள் திருமணம். செல்லி துடிதுடித்தாள்; அலறினாள்; தன் ஆசை அத்தானைக் கட்டிப் பிடித்துக்கொண்டு அழுதாள். என்ன செய்வான் அவன்தான்! கற்சிலையெனச் சமைந்தார் பெரியவர்; உள்ளூர அன்புகொண்டிருந்தவர்தானே!

நெல் அறுவடையாகிவிட்டது; திருமணமும் முடிந்துவிட்டது.

"ஒன்றுபட்ட நெஞ்சங்கள் உறவாடித் தழைக்கும் குடும்பங்களைத் தடைப்படுத்தும் இந்தச் சமுகத்தைச் சீர்திருத்த இன்னும் எவ்வளவு காலம் பிடிக்குமோ என்றெண்ணியவாறு வயலுக்கு நீர் பாய்ச்சிக் கொண்டிருந்தார் மணியின் தந்தை.

*

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.